




# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் – 7 இதழ் – 3, மே- ஜுன் 2021





**R5223**

## CROSS - BEARING THE WAY OF GROWTH
## சிலுவை சுமத்தல் வளர்ச்சிப் பாதை

''தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான்.'' – லூக்கா 14:27

ஒரு சீஷன் என்றால் ஒரு போதகரையோ அல்லது வழிகாட்டியையோ பின்பற்றும் ஒரு மாணவன். கர்த்தர் தமது சீஷர்களுக்கு மாபெரும் ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். அவர்கள் கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருந்தால் நித்திய ஜீவனால் பெரிதும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவரது சிங்காசனத்தில் அவரோடு கூட உட்காருவார்கள். அவர் எங்கே இருப்பாரோ அங்கே அவரோடு கூட இருப்பார்கள்.

ஆகையால் இந்த சீஷத்துவத்தில் என்னவெல்லாம் சம்பந்தப்பட்டுள்ளன என்ற முக்கியமான கேள்வி உண்டாகிறது. இது சுலபமான காரியமா அல்லது கஷ்டமானதா? கர்த்தர் இங்கேயும் மற்ற இடத்திலும் அதன் நிபந்தனைகளை நமக்கு சொல்லுகிறார். இன்னொரு வசனத்தில் அவர் கூறுகிறதாவது: ''ஒருவன் என்னை பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக்கடவன்,'' ''தன் சிலுவையை சுமந்து கொண்டு எனக்குப்பின் செல்லாதவன் எனக்கு சீஷனாயிருக்க -மாட்டான்.'' (மத்தேயு 16 : 24; லூக்கா 14 : 27)

ஆகையால் இந்த காரியத்தில் நிச்சயமாக ஒரு செயல்முறை உண்டு. முதலில் ஒருவன் சீஷத்துவம் என்றால் என்ன மற்றும் சிலுவை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். சிலர் மற்றவர்களைக் காட்டிலும் வித்தியாசமாக உணர்கிறார்கள். சிலுவையை எடுப்பது சிலருக்கு மிகவும் கடும் சோதனையாக இருக்கும். இதன் முக்கியத்துவத்தை சிலர் தங்கள் கருத்தின் மூலமாக தீர்மானிக்கிறார்கள்; மற்றவர்கள் அனுபவத்தின் மூலம் தீர்மானிக்கிறார்கள்.

கடைசி வரை செல்ல வேண்டும் என்று நாம் தீர்மானிக்கவில்லை என்றால் சிலுவையை எடுக்காமல் இருப்பது நல்லது என்று கர்த்தர் கூறினார். அவர் இப்படியாக விளக்குகிறார். ''கலப்பையின் மேல் தன் கையை வைத்து பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்கு தகுதியுள்ளவன் அல்ல என்றார்.'' (லூக்கா 9 : 62)

கர்த்தருடைய சீஷர்களாக ஆகிறவர்களுக்கு சிலுவையானது எதைக் குறிக்கும் என்பதை அவர் மிகவும் தெளிவாக கூறினார். அவருடைய சீஷர்கள் யாராயிருந்தாலும் துன்பப்படுவார்கள் என்று அவர் கூறுகிறார். சிலுவை சுமப்பது என்பது ஒரு கடினமான காரியம் என்று அவர் எச்சரித்தார். ஆகையால் நீங்கள் அவரது சீஷராக வேண்டும் என்று தீர்மானித்தால், நீங்கள் உட்கார்ந்து, செல்லும் செலவை கணக்குப் பார்க்க வேண்டும். சிலுவையை நீங்கள் எடுத்தால், அது வெறும் தூக்குவது மாத்திரமல்ல, மரணம் வரை விசுவாசத்துடன் சுமக்க வேண்டும்.

### சிலுவை சுமத்தலை எது அமைக்கிறது?

சத்தியத்தை அறிகிற அறிவை அடைந்த பின்பு தான் சிலுவையை எடுத்தல் நடைபெறுகிறது. உலகமானது சிலுவையை எடுப்பதே இல்லை. தனது சொந்த சித்தத்தை உடையவர்களும் சிலுவையை தொடர்ந்து சுமப்பதில்லை. மனிதர்களில் அநேகர் கூறுவதாவது: ''நான் திருமணம் ஆனதிலிருந்து நான் எனது மனைவியினால் சிலுவையை பெற்றிருக்கிறேன்.'' அதே போல் மனைவிகளும் தங்களது கணவனால் சிலுவையை பெற்றிருப்பதாக கூறுவார்கள். இவர்கள் சுமப்பது கிறிஸ்துவின் சிலுவையல்ல. விவாகத்தில் தவறான தீர்மானத்தால் துன்பப்படுகிறார்கள். ஜோடிகள் தவறாக இணைக்கப்படுகிறார்கள்.

எனினும் இப்படிப்பட்ட ஒன்று சிலுவை சுமத்தலாகிறது. கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருப்பதினால் கணவனாலோ அல்லது மனைவியினாலோ இந்த சிலுவை உருவாக்கப்பட்டால், இது கிறிஸ்துவினிமித்தமோ அல்லது சத்தியத்தினிமித்தமோ சகிக்க வேண்டிய சிலுவையாகும். வியாபார போட்டியாளர்கள் மூலமாக வருகிற எதிர்ப்புக்களை சகிப்பது, கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பதினால் சிலுவை சுமத்தலின் ஒரு பகுதியாகும். ஒரு வேளை இது நமக்கு நன்மையாக இருக்கிறது. ஏனெனில் ''சிலுவை என்பது என்ன என்று எல்லா நேரங்களிலும் நாம் காண்பதில்லை.''

''நமக்கு என்ன காத்திருக்கிறது என்பதை நாம் அறியோம்.
தேவன் அன்புடன் நமது கண்களை மறைக்கிறார்.
நாம் முன்னேறிச் செல்லும் பாதையின் ஒவ்வொரு
அடியிலும் அவர் புதிய காட்சிகளை எழும்புபடிச் செய்கிறார்.''

சிலுவை என்ன என்பதை நாம் அறியாதிருக்கும் வரை, நம்மால் சிலுவையை எடுக்க முடியாது: சிலுவையை எடுப்பதில் ஈடுபட்டு கிறிஸ்துவின் சீஷனாக முடியாது. சிலுவையை நாம் எடுத்த பிறகு நாம் அதை சுமக்க வேண்டும் என்று நமது கர்த்தர் சொல்லுகிறார். அதை சுமத்தல் என்பது அதை விட்டு ஓடிவிடுவதோ அல்லது அதனால் எச்சரிக்கை பெறுவதோ அல்ல. சிலுவையை சுமத்தல் என்பது அதை சகிப்பது. போதனைகளை இந்த கோணத்தில் நாம் கடைபிடிக்க வேண்டும்.

நமது கர்த்தர் சொல்லுகிறதாவது: ''ஒரு பட்டணத்தில் உங்களை துன்பப்படுத்தினால் மறு பட்டணத்திற்கு ஓடிப் போங்கள்.'' விசுவாசமுள்ளவர்கள் எவர்களோ அவர்கள் துன்பப்படுவார்கள். ஆகையால் நமக்கு எதிர்ப்பு இல்லாமல் இருப்பது, நமது தேவனால் தயவு பெற்றவர்கள் அல்ல என்பதற்கும் நம்மை அவர் தமது பிள்ளையாக கருதி

தொடர்பு கொள்ளவில்லை என்பதற்கும் நிரூபணமாகும். தேவன் யாருடன் தம்முடைய பிள்ளைகளாக கருதி தொடர்பு கொள்ளுகிறாரோ, அவர்கள் ராஜரீக ஆசாரியர்களாகி அவரது மகிமையான ராஜ்யத்தில் பங்கு பெறுவார்கள். வருகிற கஷ்டங்களிலிருந்து யார் ஓட நினைக்கிறார்களோ அவர்கள் தவறு செய்கிறார்கள்.

## சோதனைகளால் நோக்கம் நிறைவேற்றப்படுகிறது

பிறகு இந்த சோதனைகளிலிருந்து விடுதலை பெறுவது எப்படி? இந்த சகிப்பினால் சத்திய சேவையை நிறைவேற்றவில்லை என்றாலொழிய, நாம் அந்த சோதனைகளிலிருந்து விடுதலை பெற நாடக்கூடாது. பிறகு தேவன் வேறு ஒரு கதவை திறப்பாரா என்பதை நாம் தேட வேண்டும். உதாரணத்திற்கு ஒருவர் தான் நல்லது எதுவும் செய்யாமல் பெறும் துன்பம் மட்டும் அனுபவிப்பதாகக் கண்டால், அவர் தேவனிடம் தாம் என்ன செய்ய வேண்டும் என்பதை ஜெபத்தில் கேட்பாராக. ஒரு வேளை தேவன் அதிலிருந்து தப்பிக்கும்படியான ஒரு பாதையை திறக்கலாம். நாம் மாம்சீக சரீரத்தை விடும்வரை, நமது சோதனைகளையும் அபூரணங்களையும் விட்டு விட கூடாது. ஏனெனில் உலகத்தின் மார்க்கம் நீதிக்கு புறம்பாயிருக்கிறது. முழு உலகமும் அறியாமை, மூட நம்பிக்கை மற்றும் குருட்டுத்தனத்தினால் வழி விலகியிருக்கிறது. அவர்களுக்கிடையே நம்மை அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவரின் போற்றுதல்களை காண்பிக்கவும் நாம் கடினமாக உழைக்க வேண்டும்.

நமது வசனம் கர்த்தரை பின்பற்ற வேண்டும் என்று விசேஷமாக வலியுறுத்திக் கூறுகிறது. சிலுவையை எடுத்தல், அர்ப்பணம் செய்த தேவனுடைய பிள்ளைகளுக்கு குணலட்சணங்களை அபிவிருத்தி செய்யும் வழியாகும். சோதனைகளோ துன்பங்களோ நமக்கு வரவில்லை என்றால், சத்தியம் மற்றும் கர்த்தரின் நமது ஊழியத்தில் நமது விருப்பம் மற்றும் பசியில் இடையூறே இல்லையென்றால் நாம் ஏதோ தவறு செய்கிறோம் என்பதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம். நாம் அவருடைய சீஷனாகவில்லை.

ஆனால் இந்த சோதனைகளை நாம் பெற்றோமானால், அதை நாம் அதிசீக்கிரத்தில் நீங்கும் லேசான உபத்திரவம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இவைகள் "நமக்கு மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது." நாம் தற்காலத்தில் நோக்குவது, காணப்படுகிற -வைகளையோ, பூமிக்குரிய புகழ்ச்சியையும், மகிமையுமோ அல்ல. ஆனால் பரத்துக்குரியவைகளை கர்த்தரிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறவைகளை ஆகும். (2கொரிந்தியர் 4:17,18)

R5223

# The Gifts of Whitsuntide
# பெந்தெகொஸ்தே நாளின் வரங்கள்

1 கொரிந்தியர் 12: 1-11

"வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே." - 1 கொரிந்தியர் 12:4

மனுக்குலத்தைக் குறித்த தேவனுடைய மாபெரும் திட்டங்களில் பெந்தெகொஸ்தே என்பது ஒரு மிகவும் முக்கிய காலமாகும். அதற்கு அடுத்து முக்கியத்துவம் பெறுவது நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கு தொடர்புடைய நிகழ்வுகள். அதாவது யோர்தானில் அவரது ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியினால் அங்கே அபிஷேகம் பண்ணப்படுதல், கல்வாரியில் அவரது அர்ப்பணத்தின் உறுதிமொழிகளை நிறைவேற்றுதல், மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து அவரது உயிர்த்தெழுதல், அவரது மகிமையான ஆவியின் பிறப்பு, அதாவது தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுதல் முதலானவை.

இயேசு செய்த இவைகள் எல்லாம்,மானிட குடும்பத்திலிருந்த அவரது உடன்சுதந்தரராக எந்த அங்கமும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அல்லது யாராவது தேவனுடைய பிள்ளையாக அவரால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பு நடக்க வேண்டியிருந்தது. ஆதாமை அவர் தேவனுக்கு கீழ்ப்படிந்து மற்றும் விசுவாசம் உள்ளவராக இருக்கும் வரை, "தேவதூதரிலும் சற்று சிறியவனாக" மானிட தளத்தில் அவரது பிள்ளையாக அங்கீகரித்தார். ஆனால் அவர் கீழ்ப்படியாத போது, தேவனுக்கும் அவருக்கும் இடையேயான உடன்படிக்கையை உடைத்த பொழுது தெய்வீக தண்டனையாகிய மரணத்திற்கு கீழாக வந்தார். (ஓசியா 6:7) அந்த காலத்திலிருந்து இயேசுவின் காலம் வரை மனிதரிடையே தேவனுக்கு பிள்ளைகள் யாருமில்லை. ஏனெனில் அனைவரும் ஆதாமின் அபூரணத்தில் பாரம்பரிய பண்பினால் அபூரணத்தில் பங்கு பெறுகிறவர்களாக இருந்தார்கள்.

பிறகு தேவன் அவரது குமாரனை, ஸ்தீரியினால் பிறந்தவராக, மாசற்ற ஜீவியாக, தகப்பனாகிய ஆதாமிலிருந்து வராதவராக அனுப்பினார். ஆகையால் அவரது குமாரன் ஆதாமின் பாவத்தில் சம்பந்தப்படாதவராக இருந்தார். இவர் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவராயிருந்தார்." தேவன் அவரை தமது மகனாக அங்கீகரித்தார். அவர் யோர்தானில் தமது ஜீவனை அர்ப்பணித்து அதை தண்ணீர் ஞானஸ்நானத்தினால் அடையாளப்படுத்தின போது, தேவன் அந்த பலியை அங்கீகரித்து, அவர் மேல் பரிசுத்த ஆவியை பொழிந்தார்.

அப்போதிருந்து அவர் இரண்டு அர்த்தத்தில், முதலாவது மாம்ச பிரகாரமாக, இரண்டாவது ஆவியின் பிரகாரமாக தேவனுடைய குமாரனாக இருந்தார். ஆனால் தேவனுடைய ஒழுங்கில் ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டவர் தான் மாம்சீக ஜீவனை முழுமையாக அர்ப்பணித்து ஜெயம் பெற வேண்டும். இயேசுவின் இந்த வேலை கல்வாரியில் நிறைவேற்றப்பட்டது. அங்கே முழு உலகத்தின் பாவங்களுக்காகவும் தமது ஜீவனை கொடுத்தார்.

ஆனால் தேவன் உலகத்தை இன்னும் அங்கீகரிக்க முடியவில்லை. அவர்கள் அனைவரும் பாவிகளாக இருந்தார்கள். இயேசு பரத்துக்கு ஏறி தேவனுடைய பிரசன்னத்தில் தோன்றி பாவங்களுக்கான பரிகாரம் செய்யும் வரை தொடர்ந்து பாவிகளாகவே இருந்தார்கள். எனினும் அவர் அப்பொழுது சகல பாவங்களுக்காகவும் நிவர்த்தி பண்ணாமல், சபையின் பாவங்களுக்காக மட்டுமே நிவர்த்தி செய்தார் என்பதை கவனிக்க வேண்டும். அதாவது பிதாவானவரால் அழைக்கப்பட்டு, அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு இயேசுவின் அடிச்சுவட்டில் நடக்கிறவர்களின் பாவங்களுக்கு மட்டுமே நிவர்த்தி செய்தார். உலகத்தைப் பொறுத்தவரை அவர்களது பாவங்கள் இன்னும் அவர்கள் மேலேயே இருக்கிறது.

ஆகையால் இந்த யுகத்தில் பாவங்களுக்கான மன்னிப்பை பெறுவதற்கான ஒரே வழி கிறிஸ்துவுக்கு ஒரு சீஷனாக ஆவதுதான். இப்படியாக அப்போஸ்தலர் கூறுவது போல இயேசுவின் சீஷர்களாகிய நாம், உலகத்தின் மேல் இன்னும் உள்ள தண்டனையிலிருந்து தப்பித்திருக்கிறோம். தேவன் உலகத்தோடு தொடர்பு கொள்ள வேறான வழியையும் வேறான காலத்தையும் வைத்திருக்கிறார் என்று வேதவாக்கியங்கள் நமக்கு காண்பிக்கின்றன. தேவன் ஆயிர வருட யுகத்தில் உலகத்தின் இருளை நீக்கவும், அவர்களது பாவங்களை நீக்கி, அவர்களை மானிட பூரணத்திற்கு உயர்த்தவும் தொடர்பு கொள்வார். இந்த இடைப்பட்ட காலத்தில் தேவன் சபையோடு மாத்திரம்தான் தொடர்பு கொள்கிறார். இன்றைய பாடத்தில் அப்போஸ்தலர் விவாதிப்பது சபை வகுப்பைப் பற்றியதாகும்.

பெந்தெகொஸ்தேயிலிருந்துதான் சபை வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. ஆகையால் இது சபை விவகாரங்களில் ஒரு முக்கியமான சகாப்தத்தை குறிக்கிறது. இயேசு தமது ஊழியக் காலத்தில் அவரது சீஷர்களை அழைத்து அநேக காரியங்களை அவர்களுக்கு அறிவித்தார். ஆனால் அவர் அவர்களை விட்டு பிரியும் போது, அவர்கள் பரிசுத்த ஆவியினால் சரியான காலத்தில் அபிஷேகம் பண்ணப்பட்டு, சரியானபடி பிதாவானவரால் அங்கீகரிக்கப்படும் வரை அவர்கள் ஊழியத்தை ஆரம்பிக்காமல் காத்திருக்கும்படி கற்பித்தார். அவர்கள் பெறப்போகிற இந்த அபிஷேகம் தான் அவர்களது அதிகாரமாக இருக்கும். இது அவர்களுக்கு பிதாவானவர் மற்றும் அவரது குமாரனுடைய ஸ்தானதிபதிகளாக மற்றும் வாய்க்கருவிகளாக இருக்கும்படி அத்தியாவசியமான தகுதிகளை கொடுக்கிறது.

பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் பிதாவானவர் அவர்களை அங்கீகரிக்க முடியாது. ஏனெனில் கிறிஸ்துவின் பலியின் புண்ணியங்களை அவர்களை சார்பாக சமர்ப்பிக்கும் வரை அவர்கள் உலகத்தில் உள்ள மற்றவர்களைப் போலவே இன்னும் பாவிகளாக, தண்டனைக்குட்பட்டவர்களாக இருந்தார்கள். பெந்தெகொஸ்தே ஆசீர்வாதம் வந்தபோது, இயேசு பிதாவானவரிடம் ஏறியிருந்தார் என்ற உண்மை வெளியரங்கமானது. பிதாவானவரும் அவரை கிருபையுடன் ஏற்றுக்கொண்டு அவரது மாபெரும் பலியின் வேலையை பாராட்டி, அதை விசுவாச வீட்டாராகிய சபையின் பாவங்களுக்கு பரிகாரமாக ஏற்றுக்கொண்டிருந்தார். இந்த பாவ மன்னிப்புக்கு அடிப்படையாகவும், தேவனுக்கும் அவரது ஊழியத்திற்கும் சீஷர்களாக அர்ப்பணத்திற்கு அடிப்படையாகவும் பெந்தெகொஸ்தேயின் ஆவியின் ஜெனிப்பித்தலானது அவர்கள் மேல் வந்தது.

## ஆவியின் வரங்கள்

நாம் ஆவியின் வரங்களையும் ஆவியின் கனிகளையும் வேறுபடுத்தி பார்க்க வேண்டும். ஆவியின் கனிகள் என்பது இருதயம் மற்றும் குணலட்சண அபிவிருத்தியாகும். இது ஏறக்குறைய மெதுவாக, ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட ஒவ்வொருவரின் குணநலன் மற்றும் சுற்றுப்புற சூழலுக்கு ஏற்றவாறு இருக்கும். அப்போஸ்தலர் நமக்கு கூறுகிற இந்த ஆவியின் கனிகளை காணலாம். அவையாவன: "சாந்தம், தயவு. பொறுமை. நீடிய பொறுமை, சகோதர அன்பு மற்றும் அன்பு."

இந்த கனிகள் நமது இருதயத்தில் அபிவிருத்தி பண்ணப்பட வேண்டும். இது நமது வார்த்தைகள், செய்கைகள் மற்றும் நமது எண்ணங்களின் வெளிப்பாடாக இருக்கும் என்பதின் பொருளாகும். கிறிஸ்தவன் கனிந்திருக்கிற அளவுக்கு இந்த கனிகளும் கனிந்திருக்கும். கனிகள் இல்லையென்றால் கிறிஸ்தவன் அல்ல. ஏனெனில் அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." (ரோமர் 8:9) இந்த கிறிஸ்துவின் ஆவி, இந்த ஆவியின் கனிகள்; மாம்சீக பலவீனங்களினால் குறைத்து காண்பிக்கப் -படுகிறது. மாம்சத்தின் பலவீனமுள்ள ஒரு சகோதரன் உலகத்தின் ஆவி, சத்துருவின் ஆவி மற்றும் அவரது சொந்த ஆவிக்கு எதிராகவும் எப்படிப்பட்ட நல்ல ஒரு போரட்டத்தை போராடுகிறார் என்பதை எல்லாராலும் காண இயலாது.

தேவன் மட்டுமே இருதயத்தை அறிவார். ஆகையால் விசுவாசத்தின் அளவைக் குறித்து நாம் தீர்ப்பு சொல்வதற்கில்லை. எனினும் நம்மிடத்தில் நல்ல கனிகளோ அல்லது கெட்ட கனிகளோ காணப்படுகிறதா அல்லது தங்களை கிறிஸ்துவின் சீஷர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களிடத்தில் காணப்படுகிறதா என்று தீர்மானிக்க வேண்டும். நமது ஆண்டவர் கூறுகிறதாவது: "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?" (மத்தேயு 7 : 16) நிச்சயமாக இல்லை! முட்செடிகளும் முட்பூண்டுகளும் கெட்ட கனிகளாக. கெட்ட சுபாவத்தை சேர்ந்ததாக இருக்கின்றன: புது சிருஷ்டிகளில் தோன்றக்கூடிய கர்த்தரின் ஆவியின் கனிகள் அல்ல.

ஆனால் பெந்தெகொஸ்தே வந்தபோது, இயேசுவை முன்னரே ஏற்றுக்கொண்டிருந்த அந்த சீஷர்கள் ஆவியின் கனிந்த கனிகளை உடனே அதிகமாக வெளிப்படுத்தி காண்பிக்க முடியாதவர்களாக இருந்தார்கள். அப்படிப்பட்ட அபிவிருத்திக்கு நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள் தேவைப்படுகிறது. இந்த காலம் வரை அவர்கள் சுபாவ மனிதர்களாகத்தான் இருந்தார்கள். இயேசு சில நாட்களுக்கு முன்பாகத்தான் இப்படியாக கூறியிருந்தார். "நீங்கள் சிறு பிள்ளைகளைப் போல ஆகாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்." யார் பெரியவானாயிருப்பான் என்பதில் அவர்களுக்குள்ளே வாக்குவாதம் இருந்தது என்பதையும் முடிவாக அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் பங்குபெற பாத்திரரர்களாக இருப்பதற்கு அவர்கள் பெற்றிருக்க வேண்டிய சரியான ஆவிக்கு எதிரானதாக இது இருந்தது என்பதையும் நமது ஆண்டவர் உணர்ந்து கொண்டார். பெந்தெகொஸ்தே நாளில் மேல் அறையில் காத்துக் கொண்டிருந்த சகோதர்கள் அந்த சமயத்தில் ஏன் ஆவியின் கனிகளை வெளிப்படுத்த முடியவில்லை என்பதைக் காண்கிறோம். ஆனாலும் அவர்கள் தேவனுடைய கிருபையின் வெளிப்பாடுகளை பெற்றிருக்க வேண்டும் என்பது அவர்களுக்கும் நமக்கும் மிகவும் அவசியமாக இருந்தது. இயேசு தேவனுடைய வேலையை நிறைவேற்றியிருந்தார் என்பதையும், அவருடைய பலி நமது சார்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும் தேவன் காண்பிக்கும்படியான ஏதாவது ஒரு வழி இருந்திருக்க வேண்டும். ஆவியின் கனிகள் அல்லாத குறிப்பிட்ட சில வரங்களை அருளிச் செய்து இந்த ஏற்றுக் கொள்ளுதலை தேவன் வெளிப்படுத்தினார்.

ஆதிகால சபைக்கு அந்த வரங்கள் பரவலாக விநியோகிக்கப்பட்டன. அவைகள் அற்புதங்களாக இருந்தன. இந்த ஆவியின் வரங்களைப் பெற்ற சிலர் ஒரு மொழியையும் மற்றவர்கள் வேறு மொழியையும் பேசினார்.

இந்த மொழிகளை முன்னர் அவர்கள் அறிந்ததேயில்லை; சிலர் மற்றவர்கள் பேசின அந்நிய மொழிகளுக்கு அர்த்தம் சொல்லுகிற வரங்களை பெற்றிருந்தார்கள். சிலர் குணமாக்கும் வரங்களைப் பெற்றிருந்தார்கள். வேறு சிலர் அற்புதங்களை நடப்பிக்கும்படியான வல்லமையை பெற்றிருந்தார்கள்.

இந்த வரங்கள் மூன்று விதமான காரியங்களுக்கு பிரயோஜனமாயிருந்தன. (1) அவைகள் தேவனுடைய தயவையும்; அவைகள் கிறிஸ்து மூலம் வரப்பெற்றன என்பதையும், அவர் பரலோகத்திற்கு எழுந்தருளியிருந்தார் என்பதையும் அவரது இரட்சிப்பின் முழு வேலையும் தேவனுக்கு பிரியமாயிருந்தது என்பதையும் நிரூபித்தன. (2) தேவன் இந்த ஜனங்களோடு இருந்தார் என்பதற்கு பொதுமக்களுக்கு ரூபகாரமாக இருந்தன. தாங்கள் பெற்றிருந்தவைகளை ஆராய்வதற்கு தேவனுடைய அன்பர்களை அவைகள் வழி நடத்தும். (3) சீஷர்கள் சரியான வழியை பின்பற்றுகிறார்கள் என்பதற்கும் தேவன் அவர்களை ஆசீர்வதித்துக் கொண்டிருந்தார் என்பதற்கும், அவர்களை வழி நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதற்கும் அவைகள் நிச்சயப்படுத்துகிறவைகளாக இருந்தன. இந்த அனுபவங்கள் அனைத்தும் ஆதிகால சபையை ஸ்தாபிப்பதற்கு அத்தியாவசியமானவைகளாக இருந்தன. மிகவும் அவசியமாக இருந்தபோது இப்படிப்பட்ட வெளிப்பாடுகள் அந்த சமயத்தில் வந்தன. ஆதிகால சபை நம்மைப் போல விசுவாசித்து நடக்க முடியவில்லை. காணக்கூடியவைகள் அவர்களுக்குத் தேவைப்பட்டன. அந்த அளவுக்கு அவைகள் வழங்கப்பட்டன. ஏனெனில் அவர்களுக்கு வேதாகமம் இல்லாதிருந்தது. இப்படிப்பட்ட வாய்க்கால்கள் மூலமாக அல்லாமல் வேறு வழியில் அவர்களுக்கு போதனைகள் கிடைக்கவில்லை.

பரிசுத்த பவுல் இன்றைய பாடத்தில் இந்த காரியத்தை விளக்குகிறார். அவர்கள் கூடி வந்தபோது, ஒருவர் ஒரு அந்நிய பாஷையில் பேசுவார். சபையில் இன்னொரு இடத்திலிருந்து ஒருவர் எழும்பி, "அந்நிய பாஷை" வரம் மூலமாக பேசிய அந்நிய மொழிக்கு தனது சொந்த வல்லமையினால் அல்லாமல், தேவ வல்லமையினால் அதன் அர்த்தத்தை கூறுவார். இது சகோதரர்களை ஒவ்வொரு நாளும் விசேஷமாக வாரத்தின் முதலாம் நாள் ஒன்றாக ஈர்த்தது. அவர்கள் ஐக்கியத்தையும் போதனைகளையும் விரும்பினார்கள்; இந்த வழியில் அதை பெற்றார்கள். அந்நிய மொழியில் சொல்லப்பட்;ட செய்திகளுக்கு அர்த்தம் சொல்லி தேவன் வழிநடத்தினார்.

இப்படியாக அந்த காலத்தில் அவர்கள் போதனைகளை பெறக்கூடிய இந்த வழியில் மட்டும் தான் தேவன் அவர்களுக்கு போதித்தார்; ஆனால் தற்காலத்தில், அப்போஸ்தலர் காலத்திலிருந்து போதித்த முறைக்கு வித்தியாசமான வழியில் அவர் அவரது பிள்ளைகளுக்கு போதிக்கிறார். அந்த போதனைகள் இனி தேவையில்லை. ஆகையால் அது கொடுக்கப்படவில்லை. அதற்கு பதிலாக இன்னும் மேன்மையானவைகளை நாம் பெற்றிருக்கிறோம். கர்த்தருடைய வசனங்கள், உவமைகள், கருகலான கூற்றுக்கள் முதலானவைகளைப் பற்றிய சுவிசேஷங்களை நாம் பெற்றிருக்கிறோம். நாம் புதிய ஏற்பாட்டின் நிரூபங்களையும், பழைய ஏற்பாட்டு எழுத்துக்களின் அப்போஸ்தலர்களின் எழுப்புதலான கருத்துக்கள் ஆகியவைகளை நாம் பெற்றிருக்கிறோம். இன்னும் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களையும் நாம் பெற்றிருக்கிறோம். இது குறித்து அப்போஸ்தலர் அறிவிப்பதாவது: "நாம் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்." (2 பேதுரு 1:19)

## நமது அனுபவம் மேன்மையானது

இந்த தெய்வீக கிருபையின் உதவியினால், தேவ மனிதனாகிய பரிசுத்த பவுல் அறிவிக்கிறதாவது: "எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாகும்படி அருளப் -பட்டிருக்கிறது." இந்த வாய்க்கால்கள் மூலமாக பரிசுத்த ஆவி சபைக்கு போதித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் ஆவியின் வரங்கள் பெந்தெகொஸ்தே நாளில் அவசியமாக இருந்தன. அந்த வரங்களுக்கு பதிலாக, ஆவியின் கனிகளை, தேவனுடைய தயவின் சாட்சியமாக, நல்வழியில் நமது முன்னேற்றத்திற்காக நாம் இப்பொழுது பெற்றிருக்கிறோம். ஆதி சபையைக் காட்டிலும் கர்த்தரின் அறிவொளி நமக்கு அதிகம் தேவைப்படுகிறது. ஏனெனில் நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்.

பரிசுத்த ஆவியின் வெளிப்பாடுகளின் இந்த சகல வேறுபாடுகளும் பல ஆவிகளை குறிக்காதபடி, சபை முழுவதும் கிரியை செய்கிற, கிறிஸ்துவின் ஒரே சரீரத்தில் பல்வேறு அங்கங்கள் அனைத்தையும் கட்டுகிற ஒரே நோக்கத்திற்கான ஒரே ஆவியைக் குறிக்கிறது என்று பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார். அவர் கூறுகிறதாவது: "கிரியைகளிலேயும் வித்தியாசமுண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே... ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தை போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே குணமாக்கும் வரமும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவியை பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளை பேசுதலும், வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்படுகிறது."

## "நீங்கள் அனைவரும் ஒரே சரீரமாக இருக்கிறீர்கள்"

சபையில் ஒருவருக்கொருவர் ஒற்றுமையையும் அவர்களது தலையான கர்த்தருடனான ஒற்றுமையையும் பரிசுத்த பவுல் அடிக்கடி, குறிப்பாக இந்த பாடத்தில் முன்னே வைக்கிறார். வரக்கூடிய ராஜ்யத்தில் ஊழிய மகிமைக்கு தயார்படுத்துவதற்காக, அவர்களது பரஸ்பர நலத்திற்கும், ஆவிக்குரிய நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் ஒத்துழைக்க வெவ்வேறு வரங்கள் வெவ்வேறு சரீர அங்கங்களுக்கு சக்தியை அளித்தன என்று அவர் காண்பிக்கிறார். மனித சரீரம் ஒன்றாக இருந்தும் அவயவங்கள் பல இருந்து அனைத்தும் தலையின் கட்டுப்பாட்டில் இருப்பது போல, கிறிஸ்துவின் சரீரத்திலும் அவ்வாறே இருக்கிறது என்று அவர் கூறுகிறார். சபை ஒரே சரீரமாக இருக்கிறது. ஆனால் அநேக அங்கங்களைக் கொண்டிருக்கிறது. அனைவரும் தலையாகிய கிறிஸ்துவின் கட்டுப்பாட்டில் தெய்வீக கிருபைகளினாலும், சத்திய வசனத்தினாலும் சத்திய ஆவியின் மூலமாக இயங்குகிறார்கள். சபை அமைப்பின் நோக்கம் உலகத்தை மனந்திரும்புவது அல்ல, எதிர்கால ஊழியத்திற்காக தன்னையே உயர்த்திக் கொள்ளவும், தயார் படுத்திக்கொள்ளவும் ஆகும். ஆனால் உலகத்திற்கான

ஊழியம் சரியானபடி ஆரம்பிப்பதற்கு முன்பே, சபையானது அபிவிருத்தி அடைந்து, நிரூபிக்கப்பட்டு, தேவனால் அங்கீகரிக்கப்பட்டு, முதலாம் உயிர்தெழுதலில் ஒரு பங்கை பெற்று மகிமையடைய வேண்டும்.

### மிகவும் தலைச்சிறந்த வழி

வெவ்வேறு சரீர அங்கங்கள், மற்ற ஒவ்வொருவரின் அபூரணத்தையும், பெலவீனத்தையும், குறைவுகளையும் ஈடு செய்து மொத்தமாக சரீரத்தின் நலன்களை மட்டுமே தேடுவதற்கு எப்படி ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு தரவேண்டும் என்று பரிசுத்த பவுல் இந்த அதிகாரத்தில் மேலும் கூறுகிறார். சபையில், கிறிஸ்துவின் சரீரத்தில் பிளவுகளோ, பிரிவினைகளோ, சபை பிரிவுகளோ இல்லாமல் சகல அங்கங்களும் ஒருவர் பேரில் ஒருவர் அதே அன்புடையவர்களாக இருக்க வேண்டும். சபைப் பிரிவின் அன்பும் சபைப்பிரிவின் பெருமையும் அறியப் -படாதிருக்க வேண்டும். அதே போல ஏதாவது ஒரு அங்கம் பாடுபட்டால் அனைவரும் அனுதாபம் கொள்ள வேண்டும். தேவன் வெவ்வேறு அவயவங்களை சரீரத்தில் வைத்தார் என்று அவர் குறிப்பிடுகிறார். முதலாவது அப்போஸ்தலரையும் இரண்டாவது தீர்க்கதரிசிகளையும் அல்லது பிரசங்கிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், வரங்களையும், ஊழியங்களையும் பலவித பாஷைகளையும் தேவன் ஏற்படுத்தினார். கர்த்தர் எல்லாருக்கும் ஒரேவிதமான ஊழியங்களைக் கொடுக்கவில்லை. ஒவ்வொருவரும் தான் பெற்றிருக்கிற திறமையை உண்மையுடன் பயன்படுத்த நாடவேண்டும். இந்த வரங்களை பயன்படுத்தும்போது நாம் அப்பியாசப்படுத்த எது சிறந்ததாக இருக்கிறதோ, அதை நாட வேண்டும்.

அப்போஸ்தலர் இன்னும் கூறுகிறதாவது: இந்த வரங்களை காட்டிலும், "இன்னும் அதிக மேன்மையான வழியையும் காண்பிக்கிறேன்." இதைத் தொடர்ந்து (அதிகாரம் 13) அவர் அறிவிப்பதாவது: இந்த வரங்களை ஒருவர் பெற்றிருந்தாலும். முழுமையான பாடுகளை அனுபவிக்க வேண்டும். இந்த வரங்களோடு ஆவியின் கனிகளை அபிவிருத்தி பண்ணுவது அவசியமாக இருந்தது. நாம் தீர்க்கதரிசன வரத்தை உடையவர்களாயிருந்து, சகல இரகசியங்களையும் சகல அறிவையும் அறிந்தாலும், சகல விசுவாசமுள்ளவர்களா -யிருந்தாலும், அன்பு – ஆவியின் மாபெரும் கனி – இல்லாவிட்டால் நாம் ஒன்றுமில்லை. மேலும் அவர், வரங்கள் ஓய்ந்து போகும், ஆனால் ஆவியின் கனிகள் நித்தியமாக நீடித்திருக்கும் என்று அறிவிக்கிறார்.

ஆவியின் கனிகள் இல்லாமல் நாம் ஒன்றுமில்லை. "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்று நாம் ஜெபித்துக்கொண்டும் காத்துக்கொண்டும் இருக்கிற மகிமையான மேசியாவின் ராஜ்யத்தில் பங்குபெற முடியாது என்பதை நினைவு கூருவது நாம் கவனித்துக்கொண்டிருக்கிற பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதங்களில் முக்கியமானதாக இருக்கிறது.

**R5225**

## The Sowing and Reaping
## விதைப்பும் அறுப்பும்

ஆதியாகமம் 42

"மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்." – கலாத்தியர் 6:7

யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்களின் கதை தொடர்கிறது. பொறாமையினால் தூண்டப்பட்டு தங்கள் சகோதரன் யோசேப்பை கொடுமைப்படுத்தினதின் ஞாபகம் எப்படி தீமைசெய்தவர்களை நீண்ட வருடங்களுக்குப் பிறகு தொடர்ந்து துன்புறுத்தியது என்பதை இன்றைய பாடம் விளக்குகிறது. நம்முடைய தலைப்பு வசனம் அர்ப்பணம் செய்த தேவனுடைய பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல, பொதுவாக உலகத்தாருக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. யாராவது அறிவுடன் தெரிந்தே எதையாவது விதைத்தால் அதே போன்றே நன்மையையோ அல்லது தீமையையோ அறுவடையில் கொண்டு வரும்.

பஞ்சம் என்பது உலகம் முழுவதற்கும் பொதுவாக இருந்தது. அது பாலஸ்தீனாவையும், அதே போல எகிப்தையும் சேர்த்துக் கொண்டிருந்தது. எகிப்திலே உணவு பற்றாக்குறை இல்லை. அங்கே தானியம் இருக்கிறது என்பதும், மிதமான விலைக்கு விற்கப்படுகிறது என்பதும் சேமித்து வைத்த பழைய தானியம் என்பதும் பரவியது. யாக்கோபு எகிப்துக்கு சென்று தானியங்களை வாங்கி வரும்படி தனது குமாரர்களிடம் கூறினார்.

அவர்கள் அந்நியர்களைப் போல யோசேப்பிடம் அனுப்பப்பட்டார்கள். யோசேப்போ அவர்களைக் காண ஆசையாக இருந்தான். அவர்கள் வேவுகாரரா, எகிப்தில் எவ்வளவு தானியம் இருக்கிறது என்பதை அறிந்து ஒரு படையை கொண்டு வந்து அதை திருட வந்திருக்கிறீர்களா என்று ஒரு மொழி பெயர்ப்பாளரைக் கொண்டு யோசேப்பு பேசினான். அவர்கள் தங்கள் நிலைமையை உண்மையாகச் சொன்னார்கள். யோசேப்பு தனது தந்தையைப் பற்றியும் தனது தம்பி பென்யமீனைக் குறித்தும் விசாரித்தான். கடைசியாக அவர்களில் ஒருவனை காவலில் வைத்து மற்றவர்களுக்கு தானியத்தைக் கொடுத்து ஒரு நிபந்தனையுடன் அனுப்பினான். அந்த நிபந்தனை என்னவென்றால் அவர்கள் சொல்வது உண்மைதான், அவர்கள் வேவுகாரர் அல்ல என்பதை நிரூபிக்க, கடைசி இளைய சகோதரனை அழைத்துக் கொண்டு வரவேண்டும். இதற்கிடையில் சிமியோன் பணயக் கைதியாக காவலில் வைக்கப்பட்டான்.

சகோதரர்களின் குற்றமுள்ள மனது கடந்த கால தங்களது குற்றங்களையும் இந்த பல்வேறு அனுபவங்களையும் தொடர்புபடுத்த ஆரம்பித்தது. அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துச் சொல்லிக் கொண்டதாவது: "நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது. அவன் நம்மை கெஞ்சி வேண்டிக்கொண்ட போது அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்கு செவி கொடாமற்போனோமே; ஆகையால் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது." யோசேப்பு அவர்களை புரிந்து கொண்டான் என்பதை அவர்கள் அறியவில்லை. யோசேப்பு அவர்களை விட்டு அப்புறம் போய் அழுதான். அவனது இருதயம் கடினமாக இருக்கவில்லை. எதிர்காலத்தில் அவர்களுக்கு பிரயோஜனமாக இருக்கும்படியான ஒரு பாடத்தை மட்டுமே அவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருந்தான்.

மேசியாவின் ராஜ்யம் எல்லா இடங்களிலும் ஆசீர்வாதங்களை பொழிய ஆரம்பிக்கும் பொழுது, நிஜமான யோசேப்பாகிய மேசியா ஆபத்தின் நாளில் இதே போல கடுமையாக பேசி, விளைவு எதுவாக இருந்தாலும் அவர்களை சோர்வும் வருத்தமும் அடையச் செய்வார் என்று வேத வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் கர்த்தரின் இருதயம், யாருக்காக அவர் முன்னரே மரித்தாரோ, யாருக்காக தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பாரோ, அந்த ஏகமாய் தவித்து வேதனைப்படுகிற சிருஷ்டிகளிடம் எப்பொழுதும் அன்பும் தயவும் உடையதாக இருக்கும். மேசியாவின் ராஜ்யத்தின் ஆரம்பத்தில் வரும் ஆபத்தின நாள், கர்த்தர் வழங்கவிருக்கிற ஆசீர்வாதங்களுக்காக மனுக்குலத்தின் இருதயங்களை தயார்படுத்துகிறதற்காகவே என்பது தெளிவாகும்.

## பல அடிகளும் சில அடிகளும்

யாக்கோபின் பத்து குமாரர்களும் தானியத்துடன் வந்தபோது, தங்கள் அனுபவங்கள் நிறைந்து முழு கதையையும் தங்களது தகப்பனாரிடம் கூறினார்கள். சிமியோன் ஏன் தங்களுடன் வரவில்லை என்பதையும் அவன் ஒரு பணயக் கைதியாக வைக்கப்பட்டிருப்பதையும் விவரித்தார்கள். இன்னும் தானியத்திற்கு பணம் எடுத்துக் கொள்ளப்படாததைக் குறித்து குழப்பமடைந்தார்கள். தானியத்திற்காக அவர்கள் கொடுத்த பணம் அவர்களது ஒவ்வொரு சாக்குகளிலும் திரும்ப வைக்கப்பட்டிருந்தது. எல்லாம் விசித்திரமாக அவர்களுக்கு காணப்பட்டது. அவர்களது மனம் சில வருடங்களுக்கு முன் தங்களது சகோதரன் யோசேப்புக்கு செய்த துரோகத்தை தொடர்ந்து சுட்டிக்காட்டியது. அந்த இடைப்பட்ட காலங்களில் அவர்கள் துன்பங்களையும் பயங்கரமான அனுமானங்களையும் அறுவடை செய்திருந்தார்கள். தங்கள் சகோதரன் மேல் அவர்கள் கொண்டு வந்திருந்ததுக்கு சரியாக தங்கள் மேல் தேவன் கொண்டுவந்திருந்ததை அனுபவித்தார்கள்.

இந்த கொள்கை பொதுவாக அங்கீகரிக்கப்பட்டிருந்தால், ஒவ்வொரு மீறுதலுக்கும் தகுந்த கூலி கிடைக்கும் என்கிற தேவனுடைய வசனத்தின் உண்மைத் தன்மையை அனைவரும் உணர்ந்திருந்தால் அகில உலகத்திற்கும் எவ்வளவு நன்மையானதாக இருந்திருக்கும்! இப்படிப்பட்ட நீதியை சரியானபடி மதித்தலை, நீதியான பிரதிபலனை எதிர்பார்த்தலை இப்பொழுது எங்கும் பரவியிருக்கிற மூடு பனியில் நாம் இழந்துவிட்டோம். தப்பறையான போதகம் ஒவ்வொரு பாவத்திற்கும் நினைத்துப் பார்க்கமுடியாத ஒரே ஒரு தண்டனையாகிய நித்திய ஆக்கினையை மட்டுமே குறிப்பிடுகிறது. அந்த போதனையை உண்மையாக நம்புகிறவர்கள் முதல் இடத்தில் எவ்வளவு குறைவானவர்களாக இருந்தாலும் அதனால் உண்மையிலேயே வசீகரிக்கப்படுகிறார்கள்! அதன் அரக்கத்தனம் அதை நம்ப முடியாமல் செய்து, தேவன் முன்னறிவித்திருக்கிற உண்மையான தண்டனையை சரியானபடி காணமுடியாமல் சிந்தையை திருப்புகிறது.

இந்த முதல் முரண்பாடோடு கூட அதன் தீய பலன், அதோடு இணைகின்ற மற்றொன்றையும் நாங்கள் சேர்க்கிறோம். நமது கத்தோலிக்க நண்பர்கள் கூறுவது என்னவென்றால், அவர்களது சபையில் சேர்ந்தால் நித்திய ஆக்கினையிலிருந்து விடுபட்டு குறைவான ஆக்கினையையே பெறுவார்கள் என்பதாகும். புரட்டஸ்டண்ட் சபையாரைக் காட்டிலும் அந்த கொள்கை மிகவும் வாதபொருத்தமுடையதாக இருக்கிறது. ஆகையால் இவை இரண்டில் அதுவே குறைவாக தீமை உடையதாக இருப்பதாக அநேகர் ஏற்றுக்கொள்கிறார்கள். பிறகு புரட்டஸ்டன்ட் கொள்கைக்கு வருவோம். ஒரு மனிதனோ அல்லது ஸ்திரீயோ மரிக்கும் தறுவாயில், ‘‘தேவனே என்னை மன்னியும்’’ என்று கூறினால், பாவங்களினால் வரும் அனைத்து தண்டைகளிலிருந்தும் தப்பித்து, உடனே சொர்க்கத்திற்கு செல்வார்கள். இந்த கொள்கைகள் எல்லாம் தீங்கிழைக்கக் கூடியதும் முரண்பாடானதுமாகும் என்று நாங்கள் கூறுகிறோம். வேதாகம கொள்கை போதிக்கப்பட்டால், விசுவாசிக்கப்பட்டால் மிகவும் பயனுள்ளதாக காணப்படும் என்று நாங்கள் நிச்சயப்படுத்துகிறோம்.

அந்த வேதாகம கொள்கை நமது தலைப்பு வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. ‘‘மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.’’ ஒருவன் கொடுமையை, வஞ்சகமான வார்த்தைகளை, அநீதியை, சுயநலத்தை, தீயவைகளை பேசுதல், அவதூறு ஆகியவைகளை விதைக்க விரும்பினால், நிச்சயமாக அவன் ஒரு அறுவடை காலத்தைப் பெறுவான். அவனது விருப்பத்திற்கு இசைவான பரிசுகளை சேகரிப்பான்.

தெய்வீக ஏற்பாடுகளை முன்னேற்ற மனுக்குலத்தினால் இயலாது. ஆகையால் சகல கிறிஸ்தவ ஜனங்களும் புதிதாக தேவனுடைய நீதியையும், அன்பையும், கூற ஆரம்பிக்க வேண்டும். அதாவது பாவத்திற்கு தேவனுடைய நீதியான தண்டனை மரணம் என்பதையும், ஆனால் அந்த தண்டனையிலிருந்து விடுதலை அடைய கிறிஸ்துவின் மேசியாவின் ஆயிர வருட அரசாட்சியில் கிறிஸ்துவின் மூலமாக தேவன் ஏற்பாடுகளை செய்திருக்கிறார் என்பதையும் கூற வேண்டும். அதன்பிறகு நமது ஆதி தகப்பன் ஆதாமின் பாவத்தினால் நாம் இழந்த சகலத்தையும், தேவனுடைய சாயலையும் ரூபத்தையும் திரும்பப் பெறவும், தேவனுடன் ஒப்புரவாகக் கூடிய ஒரு முழு சந்தர்ப்பத்தையும் ஆதாமின் இனத்தின் ஒவ்வொரு அங்கமும் பெறுவார்கள் என்பதையும் நாம் கூற வேண்டும்.

ஆனால் இதற்கிடையில் ஒவ்வொருவரும் தங்களது வார்த்தை, கிரியை மற்றும் சிந்தனையில் ஒரு பொறுப்பை பெற்றிருக்கிறார்கள். எந்த அளவுக்கு ஒருவர் வெளிச்சம், அறிவு மற்றும் பொன்னான கற்பனைக்கு விரோதமாக பாவம் செய்கிறாரோ, அதே அளவுக்கு தனது குணலட்சனத்தை பங்கப்படுத்துகிறார். இப்படியாக தேவனுடைய சாயலுக்கும் ரூபத்திற்கும் திரும்பக் கூடிய சந்தர்ப்பத்தையும், மிகவும் கடினமாக்குகிறார். யாருடைய மனசாட்சி மிகவும் பங்கப்படுகிறதோ அவர் தனது மார்க்கத்தை திரும்பப்பெறும்படியான வழியை கண்டுபிடிப்பதில் மிகவும் கஷ்டத்தையும் இடுக்கணையும் அடைவார்.

இந்த தெய்வீக ஒழுங்கின்படி புறஜாதி ஜனங்கள், கிறிஸ்தவ தேசங்களில் உள்ள ஜனங்களைக் காட்டிலும் பெரும்பாதையான பரிசுத்த வழியில் போக மிகவும் தயாராக இருப்பார்கள். கிறிஸ்தவ தேசத்தின் ஜனங்கள் அதிக வெளிச்சத்தையும், அதிக சலுகையையும் அதிக சந்தர்ப்பங்களையும் பெற்று, மாபெரும் அறிவுக்கு எதிராக பாவம் செய்து, தங்கள் மனசாட்சியை மிகவும் ஆழமாக வறண்டு போகப் பண்ணுகிறார்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து இயேசு கூறியதாவது: ‘‘கெஹென்னாவின் தண்டனைக்கு (இரண்டாம் மரணத்திற்கு) எப்படி தப்பித்துக் கொள்வீர்கள்!’’

## யாக்கோபின் நரை மயிர் ஷியோலுக்கு

அடுத்த முறை தானியம் வாங்க செல்லும் போது பென்யமீனும் தேவைப்படுகிறான் என்பதை எளிமையான வயதான யாக்கோபு கேட்ட போது, அவர் மறுப்புக்கூறி, அது நடக்காது என்று அறிவித்தார். யோசேப்பு போய்விட்டான், அவரது கடைசி இளைய மகன் பென்யமீனை இப்பொழுது இழந்தால், அந்த துக்கம் அவரது நரைமயிரை சஞ்சலத்தோடே ஷியோலுக்குள், மரண நிலைமையாகிய கல்லறைக்குள் சீக்கிரத்தில் இறங்கப்பண்ணும்.

நமது ஆங்கில வேதாகமத்தில் இந்த ஷியோல் என்ற வார்த்தை நரகம், குழி மற்றும் பாதாளம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பழங்காலத்தில் இந்த மூன்று வார்த்தைகளும் ஒரே அர்த்தமுடையவைகளாக இருந்தன. உதாரணத்திற்கு பல வாளிகள் (தானியத்தை அளக்கும் அளவை) உருளைக்கிழங்கை பூமியில் புதைப்பதற்கு நரகத்தில் போடுவது என்று கூறுவார்கள். ஆனால் இதை மனிதனுக்கு சொல்லும் பொழுது சில சமயங்களில் கல்லறை என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. மொத்தத்தில் இந்த ஷியோல் என்ற வார்த்தை 66 தடவை வருகிறது. அதில் பாதிக்குமேல் குழி அல்லது கல்லறை (பாதாளம்) என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

திருத்திய மொழிபெயர்ப்பை செய்யும் போது அறிஞர்கள் ஷியோல் என்ற வார்த்தையை நரகம் என்று மொழி பெயர்க்க மறுத்தார்கள். ஏனெனில் இந்த இடைப்பட்ட நூற்றாண்டுகளில் அந்த வார்த்தை அதன் மூலப் பொருளை இழந்து அக்கினியும் ஆக்கினையும் உள்ள இடத்தை குறிப்பிடும்படி ஆகிவிட்டது. எபிரேயு பாஷையில் இந்த ஷியோல் என்ற வார்த்தை அப்படிப்பட்ட பொருளை உடையதாக இராததால் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க மறுத்து விட்டார்கள். இந்த உண்மைகளை எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள். பிறகு அதை எப்படி மொழி பெயர்ப்பது என்று சச்சரவு வந்தது. சிலர் ஷியோல் என்ற வார்த்தையை பாதாளம் அல்லது கல்லறை என்று ஒரே மாதிரி மொழிபெயர்க்க மறுத்து விட்டார்கள். ஏனெனில் அது சில கிறிஸ்தவ ஜனங்களுக்கு மிகவும் தீவிர மாற்றம் உடையதாக தோன்றும்.

முடிவாக, இந்த பிரச்சனைக்கு ஒரு தீர்வு காண ஷியோல் (Sheol) என்ற எபிரேயு வார்த்தையையும் அதற்கு ஒத்த கிரேக்க வார்த்தையாகிய ஆதேஸ் (Hades) என்ற வார்த்தையையும் எங்கெல்லாம் நரகம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் மொழி பெயர்க்காமல் விட்டுவிடுவது என்று முடிவு செய்யப்பட்டது. யாராவது அவைகளின் உண்மைப் பொருளை கண்டுபிடித்தால் அது சரியாக இருக்கும். அதை கண்டுபிடிக்காமல் இருந்தால் அவர்கள் அறியாமையில் இருப்பார்கள். ஷியோல், ஆதேஸ் என்ற வார்த்தைகள் ஆக்கினையின் இடத்தைக் குறிப்பதாக இன்னும் நினைத்துக் கொள்கிறார்கள். நமது பேப்டிஸ்ட் சபை நண்பர்கள் இப்படிப்பட்ட இக்கட்டான நிலைமைக்கு வந்து, ஷியோல் மற்றும் ஆதேஸ் என்ற வார்த்தைகளை "கீழ் உலகம்" (Under world) என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். கல்லறை, பாதாளம், மரித்த நிலைமை என்று குறிப்பிடப்பட்டால், அதில் யாரும் நிச்சயமாக குற்றம் கண்டுபிடிக்க முடியாது.

யாக்கோபு தனது நரைமயிர் கீழே ஷியோலுக்கு போகும் என்று சொன்னபோது அவரது குமாரர்கள் அவர் நித்திய ஆக்கினைக்கு போவதாக சொன்னார் என்று புரிந்து கொள்ள மாட்டார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. அவர் என்ன சொன்னார் என்பது தெளிவாக இருக்கிறது. அவர் சொன்னதின் அர்த்தமாவது: "எனது பிள்ளைகளே, நான் நரைத்து வயதானவனாக இருக்கிறேன். இந்த கடைசி மகனை இழந்தால் நான் மரித்துப் போவேன். என் நரைமயிர் சஞ்சலத்தோடே பாதாளத்தில் (ஷியோல்) கல்லறையில் இறங்கும்." யாக்கோபின் நரைமயிர் எங்கே சென்றது என்று யாரும் கேள்வி கேட்க வேண்டிய அவசியமில்லை. யாக்கோபின் நரைமயிர் கடைசியாக ஷியோலுக்குள் சென்றது. ஆனால் துக்கத்தினால் அல்ல, யாக்கோபின் வயதான காலத்தில் தனது பிள்ளைகளுடனான ஐக்கியத்தினாலும், யோசேப்பு எகிப்து தேசத்தின் ஆளுகைக்கு மிகவும் உயர்த்தப்பட்டதினாலும் மிகவும் சந்தோஷப்படுத்தப்பட்டார்.

## நமது தலைப்பு வசனத்தின் பாடம்

நாம் பார்த்திருக்கிறது போல, பரிசுத்த பவுல், மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் என்று பொதுவாக கூறினாலும், சபையின் அனுபவத்தை குறிப்பாக குறிப்பிடவே இந்த வார்த்தைகளை பயன்படுத்தினார் என்பது தெளிவாகிறது. சந்தர்ப்பம் ஒரு பிரயோகத்தை ஏற்படுத்துகிறது. கிறிஸ்துவின் மரணத்துடனான அர்ப்பணிப்பு போதுமானதல்ல என்று உறுதிப்படுத்தி, இந்த வார்த்தைகள் அர்ப்பணம் பண்ணின தேவனுடைய பிள்ளைகளுக்கு பொருந்துகிறது. மாறாக, தேவனை கேலிப்பண்ணவோ, வஞ்சிக்கவோ, அற்பமாக எண்ணப்படவோ முடியாது. தேவன் நம்முடன் ஒரு உடன்படிக்கைக்குள் நுழைந்திருந்தால், நமது உடன்படிக்கையைத் தவிர வேறு எதுவும் நிற்காது.

பிறகு அப்போஸ்தலர், கர்த்தருடனான கிறிஸ்தவர்களின் உடன்படிக்கையின் சாராம்சத்தை ஒப்பிக்கிறார். அவர்களது உடன்படிக்கை சகல பூமிக்குரிய ஆசைகள், நோக்கங்கள், நம்பிக்கைகளை பலி கொடுத்து அதன் மூலம் அவர்கள் தேவனுக்கு பிரியமாகவும் ஏற்புடையவர்களாகவும் ஆகி, கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக, ஆவியின் ஜீவியாக கிறிஸ்துவின் உடன்சுதந்தரராகி, திரைக்கு அப்பாலுள்ள அழிவில்லாத -வைகளை அடைவதாகும். அவர் கூறுவதாவது: "மாம்சத்திற்காக விதைப்பவன் மாம்சத்தில் அழிவை அறுப்பான்." இதன் மூலம் அவர் கூறுகிறதாவது: ஒரு கிறிஸ்தவன் தேவனுடன் இந்த உடன்படிக்கைக்குள் நுழைந்து, மாம்சீக சித்தத்துக்கு மரிக்கவும் தேவனுடைய சித்தத்திற்கு பிழைக்கவும் தீர்மானித்த பிறகு, மாம்சத்தின்படி பிழைத்தால்–அதன் விருப்பத்தின்படி, அதன் தூண்டுகோலின்படி அதன் வழிநடத்துதலின்படி, அதன் ஆவலின்படி நடந்தால் அவனது வழியின் முடிவு மரணம், இரண்டாம் மரணமாகும். இது எருசலேம் நகரத்திற்கு வெளியே கழிவுப் பொருட்களை அழித்த கெஹென்னா அக்கினியினால் அடையாளப்படுத்தப்பட்டது.

மறுபுறம், யாராவது ஆவிக்காக விதைத்து, புது சிருஷ்டிக்கேற்ப வாழ்ந்தால், தனது அர்ப்பணத்தின் உடன்படிக்கைக்கு ஏற்ப வாழ்ந்தால் – சரியான வழியில் ஆரம்பத்தை மட்டும் செய்யாமல்–இது காரியத்தை அவனுக்கு சாதகமாக தீர்மானிக்கும். சில உயர்ந்த மனிதர்கள், முன் வாழ்ந்தவர்கள் மிகவும் அபாயகரமான காரியங்களை மாம்சத்தின் தூண்டுதல்களால்

செய்திருக்கிறார்கள். ஆனால் பாவத்திற்குள் இடறி விழுதல் மாம்சத்தின்படி ஜீவிப்பது அல்ல. அது அப்படி ஜீவிக்க ஆரம்பிப்பது மட்டுமே. ஆத்துமாவானது சரியான படி தனது பாவத்தினால், பலவீனத்தினால் அப்பியாசப்படுத்தப் -பட்டால், அது தானே மீண்டு, பரலோக கிருபையின் சிங்காசனத்திற்கு திரும்பி வந்து, இயேசுவின் நாமத்தில் இன்னும் தேவையான நேரத்தில் தயவை பெற்று, கிருபையை காண முடியும். ஆனால் இந்த சந்தர்ப்பங்களும் சலுகைகளும் பயன்படுத்தப்படவில்லை -யென்றால், மாம்சத்தின்படி ஜீவிப்பது தூண்டப்பட்டால் அதன் பலன் மரணமாகும்.

ஆகையால் மறுபுறம், நீதியான சுயபலியின் ஜீவியத்தை ஜீவிக்க ஆரம்பித்தால் மட்டும் போதாது. ஒரு தவறினால் மேற்கொள்ளப்பட்டு, வருத்தத்தின் கண்ணீரை சொரிந்த பிறகு, ஒரு நீதியான மார்க்கத்திற்கு திரும்ப அவனை குணமடைய செய்வது போதாது. ஆனால் நாம் ஆவியின்படி ஜீவித்தால், ஆவியின் மூலம் சரீரத்தின் செய்கைகளை அழித்தால், தேவன் சகல விசுவாசிகளுக்கும் வாக்குத்தத்தம் பண்ணியுள்ள நித்திய ஜீவனை ஆவியின் தளத்தில் பெறுவார்கள். ஆனால் இந்த ஆவியின்படி நடத்தல் என்பது ஒரு பெரிய உடன்படிக்கை, ஒரு தவற்றினால் நாம் மேற்கொள்ளபடாதபடியும், தேவனுடைய வாக்குத்தத்தின் இந்த மகிமையான காரியங்கள் நம்மை விட்டு நழுவாதபடிக்கும் செல்வத்தின் வஞ்சகத்தினாலும், இந்த வாழ்க்கையின் அக்கறையினால் நாம் சுமத்தப்படாதபடிக்கும், வழியினால் மயக்கமடையாத -படிக்கும் நமது விசுவாசம் பலவீனப்படாதபடிக்கும் தொடர்ச்சியான விழிப்பும் ஜெபமும் தேவைப்படுகிறது.

இந்த சிந்தனை நமது மனதிற்கு முன்னே நிச்சயமாக இருப்பது அவசியம். ஒவ்வொரு கிறிஸ்தவனின் ஜீவியத்திலும் ஒவ்வொரு கிரியையும், வார்த்தையும், எண்ணமும் அதன் முடிவான பலனை பெற்றிருக்கிறது. எனினும் ஒரு வார்த்தையோ, ஒரு கிரியையோ, ஒரு எண்ணமோ நன்மைக்கோ அல்லது தீமைக்கோ தீர்மானிக்கும் சக்தியை பெற்றிருக்காது. அதிகமாக உண்மையுள்ளவர்களாக அதிகமான விசுவாசமுள்ள -வர்களாக இருந்தால், தவறுகள் குறைவாக செய்வோம்; மிகவும் அதிகமாக இரட்சகரைப் போன்று இருப்போம்; அப்போஸ்தலர், "மகிமையில் நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்" என்று கூறுவது போல, பிரகாசமே நமது பரிசாக இருக்கும்.

பிறகு, உலகத்தாரயிருப்பவர்கள் மேசியாவின் ராஜ்யத்தின் கீழ் ஜீவனா, மரணமா என்கிற சோதனையில் அவர்களது ஒவ்வொரு நல்ல கிரியையும் ஒவ்வொரு கெட்ட கிரியையும் செல்வாக்கையும் முக்கியத்துவத்தையும் பெறும் என்பதை அறிவார்கள். கிறிஸ்துவோடு மரித்தவர்களாகவும், அவரோடு எழுந்தவர்களாகவும் ஆவதற்கு உடன்படிக்கைக்குள் நுழைந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும், அவரோடு கூட ஆளுகை செய்ய, அவரோடு கூட பாடுபட வேண்டும் என்பதையும், ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு சிந்தையும், ஒவ்வொரு செயலும் மாபெரும் பலன்களை கொண்டிருக்கிறது என்பதையும் அறிய வேண்டும். அப்போஸ்தலர் கூறுவது போல, அப்படிப்பட்ட சகலரும் தேவனுக்கு பிரியமானவைகளை அறியவும் செய்யவும் உயர்ந்த பரிசை அடையவும் நாடி, ஜாக்கிரதையாகவும், ஞானமாகவும் வாழ்க்கையில் நடக்க வேண்டும்.

## R5226 The Abrahamic Covenant and the New Covenant

## ஆபிரகாமின் உடன்படிக்கையும் புதிய உடன்படிக்கையும்

ஆபிரகாமின் உடன்படிக்கை என்பது புதிய உடன்படிக்கையல்ல, அது நியாயப்பிரமாண உடன்படிக்கையுமல்ல. மேசியாவின் ஆளுகை காலத்தில் "உத்தம இஸ்ரயேலர்களாக" ஆக விரும்புகிற சகல மனுக்குலத்துடனும் இஸ்ரயேலர்களுடனும் செய்யப்போகிற ஏற்பாட்டுக்கு புதிய உடன்படிக்கை என்று பெயர். அந்த புதிய உடன்படிக்கை ஆபிரகாமின் உடன்படிக்கையில் உத்தேசிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை நிறைவேற்றுவதற்கு ஆரம்பிக்கப்படும்.

ஆபிரகாமின் உடன்படிக்கை ஆபிரகாமின் சந்ததியோடு சம்மந்தப்பட்டதாகும். அது உலகத்தை ஆசீர்வதிக்கும் விஷயத்தில், மகிமையானதாகவும் சக்தியுள்ளதாகவும் ஆக்கப்படும். உண்மையான ஆபிரகாமின் சந்ததி மகிமையடையும் போது, ஆபிரகாமின் உடன்படிக்கையில் அதற்காக கொடுக்கப்பட்டுள்ள மகிமையான வேலைகளை நிறைவேற்றும் ஏற்பாடுகளில் புது உடன்படிக்கை தொடர்புடையதாக இருக்கின்றது.

ஆபிரகாமின் உடன்படிக்கையின் நிறைவேறுதல் நமது கர்த்தர் இயேசுவில் ஆரம்பித்தது. ஆனால் அவர் தமது பரலோக மகிமையை விட்டபோது அல்ல. பெத்லகேமில் குழந்தையாக பிறந்தபோது அல்ல, தேவன் அவரது அர்ப்பணத்தை ஏற்றுக்கொண்டு, அவரது ஞானஸ்நானத்தில் அவரை ஒரு புது சிருஷ்டியாக ஜெனிப்பித்து, அவரது உயிர்தெழுதலில் புதிய சுபாவத்தில் பூரணப்படுத்திய போது தான், மனிதனாகிய இயேசு, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுவதற்கு முன்பு மனுக்குலத்தை ஆசீர்வதிக்ககூடியவராக வாக்குத்தத்தின்படி ஆபிரகாமின் சந்ததியாக இல்லை. இயேசு மாம்சத்தில் இருக்கும் வரை, அவர் பூரணராக இருந்தாலும், உலகத்தை அவர் மூலம் ஆசீர்வதிப்பது இயலாததாக இருந்தது. உலகமானது மரண தண்டனைக்குள்ளாக இருந்தது. அந்த மரண தண்டனையை விலக்குவதற்கான ஏற்பாடு செய்யப்படும் வரை உலகமானது ஆசீர்வதிக்கப்பட இயலாது.

ஆகையால், மீட்கும் பொருள் கொடுக்கப்பட வேண்டியது, உலகிற்கு அவசியமாக இருந்தது. இயேசு மாம்சத்தில் மீட்கும் பொருளை கொடுத்த போது, தேவன் அவரை ஜெனிப்பித்து, உயிர்ப்பித்து உயர்ந்த ஆவியின் சுபாவத்திற்கு உயர்த்தாதிருந்தால் இயேசு மகிமையின் ராஜாவாகவும் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியராகவும் ஆவதற்கு அவருக்கே ஜீவன் இருந்திருக்காது. (சங்கீதம் 110 : 4; எபிரேயர் 5 : 10) எனினும் இயேசு, தமது தாயார் மூலமாக மாம்சத்தின்படி ஆபிரகாமின் சந்ததியாக இருந்தாலும், மாம்சத்தின்படி ஆபிரகாமின் உடன்படிக்கையை சுதந்தரித்துக் கொள்ளவில்லை. ஆனால் ஆவியின்படி புது சிருஷ்டியாக சுதந்தரித்துக் கொண்டார்.

ஆகையால் உயர்ந்த சுபாவத்தை அடைவதற்கும், ஆபிரகாமின் ஆவியின் சந்ததியாக ஆவதற்கும், பூமியிலுள்ள சகல வம்சங்களையும் ஆசீர்வதிப்பதற்கும் இயேசு ஒரு விசேஷித்த பலியின் ஜீவியத்தில் நுழைய வேண்டியது அவசியமாக இருந்தது. அவரது சரீரமாகிய சபை, அவரது சகல அனுபவங்களிலும் பங்கு பெற்று, பூமிக்குரிய ஜீவனையும் கொடுக்க வேண்டும். ஏனெனில் யூதராயிருந்தாலும், புறஜாதியாராயிருந்தாலும் மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது என்பது உண்மையாயிருக்கிறது. எனவே சபையானது

பலியின் உடன்படிக்கையில் இயேசுவுடன் நுழைவது, சலுகையாக இருக்கிறது. ஆகையால் நாம் வாசிப்பதாவது: "பலியினாலே என்னோடு உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்." (சங்கீதம் 50:5)

இந்த பரிசுத்தவான்களை சேர்ப்பதற்கும், அவர்கள் தங்கள் பலிகளை செலுத்துவதற்கும் முழு சுவிசேஷ யுகமும் தேவைப்பட்டிருக்கிறது. பரலோக சுபாவத்தை அடைவதற்கு முன்னதாகவும் வாக்குத்தத்தின்படி ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாகவும் சுதந்தரராகவும் ஆவதற்கும் முன்னதாகவும் அந்த பலிகள் நிறைவேற்றப்பட வேண்டும். இப்படியாக அப்போஸ்தலர் கூறுவதாவது: "இஸ்ரயேலர்கள் தேடுகிறதை (ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாக இருப்பதை) அடையாம -லிருக்கிறார்கள். தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள். மற்றவர்கள இன்றைய தினம் வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்." (ரோமர் 11:7)

இயேசு அவர்களது பரிகாரியாக செயல்பட்ட பலியின் உடன்படிக்கையின் மூலமாக தெரிந்துகொள்ளுதல் இந்த ஆசீர்வதிக்கப்பட்ட நிலையை அடைந்தது. முதல் அங்கங்கள் பெந்தேகொஸ்தே நாளில் ஏற்றுக்கொள்ளப் -பட்டார்கள். கடைசி அங்கங்கள் தங்கள் ஓட்டத்தை சீக்கிரத்தில் சந்தோஷத்துடன் முடிப்பார்கள் என்று நம்புகிறோம். பிறகு ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததி நிறைவடைந்து, புதிய உடன்படிக்கையின் உண்மையான மாபெரும் மத்தியஸ்தராக இருந்து உலகிற்கு சேவை செய்ய தயாராக இருப்பார்கள்.

ஆபிரகாமின் உடன்படிக்கை, தேவனுடைய சொந்த உடன்படிக்கையாக அல்லது வாக்குத்தத்தமாக இருக்கிறது. ஏனெனில் அது நிபந்தனை அற்றதாக, மத்தியஸ்தர் இல்லாததாக இருக்கிறது. (கலாத்தியர் 3:19,20) அது இரத்தத்தினால் முத்திரைப்போட அவசியமில்லாதிருந்தது. இன்னும் சரியாக கூறினால், தேவன் அதை தமது ஆணையினால் உறுதிப்படுத்தினார். (எபிரேயர் 6:16-18) நிழலாக ஆசீர்வதிக்கப்பட வேண்டிய ஜனங்களின் பாவங்களுக்கு பதிலீடாக ஆடு மற்றும் காளைகளின் இரத்தம் நியாயப்பிரமாணத்திற்கு தேவைப்பட்டது. உண்மையாகவே ஆசீர்வதிக்கப்பட வேண்டிய ஜனங்களின் பாவங்களுக்கு பதிலீடாக மேலான பலிகளின் இரத்தம் புது உடன்படிக்கைக்கு தேவைப்படுகிறது. இந்த இரண்டு உடன்படிக்கைகளுமே இரத்தம் சிந்தப்படாமல், பாவங்கள் மன்னிப்படையாமல் பலனளிக்காது.

ஆபிரகாமின் உடன்படிக்கை புது சிருஷ்டியில் இதை மையப்படுத்துகிறது. ஆரம்பத்திலிருந்தே தேவன், ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியை முதலாவதாக அர்த்தப்படுத்துகிறார். இந்த புது சிருஷ்டி பாவத்தை அறிந்ததில்லை. இயேசு பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாக இருந்ததினால், உடன்படிக்கையின் உறவுக்குள் நுழையவும் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாகவும் சுதந்தரராகவும் ஆவதற்கும் அவருக்கு பாவ நிவாரணம் தேவைப்படவில்லை. அவரது அங்கங்களாக ஏற்றுக் -கொள்ளப்பட்டவர்கள், அவரது அங்கங்களாக தத்தெடுக்கப்பட்டு, தமது பலியின் புண்ணியத்தை சாட்டுதல் பண்ணி, அவர்களை தமது சொந்த மாம்சமாக தியாகமாக சமர்ப்பணம் செய்ததைத் தவிர, அவர்களுக்கு அப்படிப்பட்ட எந்தவித நிற்குதலும் அல்லது தகுதியும் கிடையாது.

ஆகையால் மிகவும் சரியாகச் சொல்வோமானால் ஆபிரகாமின் உடன்படிக்கை இரத்தத்தினால் முத்திரையிடப் -பட்டிருக்கிறது என்றோ அல்லது அது எப்பொதும் அப்படி முத்திரையிடப்பட்டிருக்கும் என்றோ நாம் சொல்ல முடியாது. எனினும் இரத்தம் சிந்தாமல் (மரணம்) இயேசு உண்மையான மகா தீர்க்கதரிசியாக ஆசாரியராக மற்றும் ராஜாவாக ஆகியிருக்க முடியாது என்ற உண்மையையும் இரத்தம் சிந்தப்படாமல் (மரணம்) அவரது அங்கங்களாகிய நாம் அவர் மூலமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டோம் என்ற உண்மையையும் அது மாற்றாது. இந்த மறைமுகமான வழியில் மட்டுமே ஆபிரகாமின் உடன்படிக்கை இரத்தத்தினால் முத்திரையிடப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படக் கூடும். பரிசுத்த பவுல் அது யேகோவாவின் ஆணையினால் முத்திரையிடப்பட்டது என்று அறிவிக்கிறார். (எபிரேயர் 6:13-18)

**R5227**

## An Interesting Question
## ஆவலை எழுப்பும் ஒரு கேள்வி

கேள்வி : தேவனுக்கு முன்பாக நமது நிற்குதலை கண்டுபிடிக்க ஏதாவது வழி இருக்கிறதா?

பதில் : அப்போஸ்தலர் யோவான் கூறுகிறதாவது: "நம்முடைய இருதயம் நம்மை குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியம் கொண்டிருப்போம்." (1யோவான் 3:21) அதற்கு நம்மையும் நமது முன்னேற்றத்தையும் நாமே அளவீடு செய்ய ஆரம்பிக்க வேண்டும். நமது வாழ்க்கையின் காரியங்களில் நாம் தேவனை சந்தோஷப்படுத்துகிறோமா இல்லையா என்பதை அறிய, தேவனுடைய குடும்பத்திற்குள் வர தேவையானவைகளை செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறோமா என்பதை முதலில் நாம் அறிய வேண்டும். நாம் தேவனுடைய சித்தத்தை செய்ய நாம் நம்மை முழு அர்ப்பணம் செய்திருக்கிறோமா? நாம் நம்மை முழு அர்ப்பணம் செய்திருக்கிறோம் என்பதை அறிந்தால், அடுத்து வரவேண்டிய கேள்வி, தேவனுடைய சித்தத்தை எந்த அளவுக்கு அறிந்திருக்கிறேன்? அதை எந்த அளவுக்கு செய்ய நாடுகிறேன்? என்பதாகும். நமது வாழ்க்கைக்குரியதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல், நமது நேரம், பலம் மற்றும் நாம் பெற்றிருக்கிற அனைத்தையும் தியாக மனதுடன் நம்மால் முடிந்தவரை பயன்படுத்துகிறோமா? பொதுவான முறையில் இதுதான் நாம் பின்பற்றுகிற மார்க்கமாக இருந்தால், பிறகு நாம் மிகவும் திருப்தியடைவதற்கு இதுவே போதுமானதாக இருக்கிறது.

பிறகு நாம் எதிர்பார்க்க வேண்டிய காரியம் என்னவென்றால், "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப் -படுவார்கள்." (2தீமோத்தேயு 3:12) இந்த சாட்சி கொடுக்கிற ஆவி நம்மிடம் இல்லையென்றால் நாம் எந்த துன்பத்தையும் அடையவில்லை என்றால், நாம் நமது வெளிச்சத்தை பிரகாசிக்க பண்ணவில்லை. இது நம்மை அறிவீனமான காரியத்துக்கு வழி நடத்துக் கூடாது. ஆனால் நமது ஜீவனை அவருடைய ஊழியத்திற்கு கொடுக்கிறேனா என்பதை நம்மை நாமே சோதிக்க வேண்டும். தற்காலத்தில் பாடுகள் எதையும் நாம் காணவில்லை என்றால் அது நமக்கு குழப்பத்தை கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

நாம் துன்பத்தைக் காண்போமானால், அது நாம் ஏதாவது தவறு செய்ததால் வந்ததல்ல என்பதையும், பிறரது அலுவல்களில் ஈடுபட்டதால் வந்ததல்ல என்பதையும் நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சத்தியனிமித்தமும் சகோதரர் நிமித்தமும் நாம் துன்பப்படுகிறோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் தேவனுடைய குடும்பத்திற்குள் வந்திருக்கிறோம் என்பதற்கான ரூபகாரங்கள் இருந்தால், அவரது சித்தத்தை அறியவும் செய்யவும் நாம் ஆராய்ந்தால், வழியிலே நாம் சோதனைகளையும் கஷ்டங்களையும் பெற்றிருந்தால், அதை நாம் சரியானபடி அப்பியாசப்படுத்திக் கொண்டால், நாம் அவரது உண்மையுள்ள ஜனங்களாக நம்மை எண்ணிக் -கொள்ளலாம்.

**R5227**

## Evidences of the Anointing of the holy spirit

## பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டதற்கான ரூபகாரங்கள்

''கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்.'' – கொலோசெயர் 1:27

சபையானது கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கம் என்ற எண்ணத்தை கொடுத்து, வேத வாக்கியங்கள் அடிக்கடி சபை "கிறிஸ்துவுக்குள்" இருக்கிறதாக பேசுகின்றன. (ரோமர் 12:4,5; 1 கொரிந்தியர் 12 : 12, – 27; 2 கொரிந்தியர் 5:17) நமது கர்த்தரே இதே கருத்தில் நமது கர்த்தர் திராட்சை செடி, நாம் அதன் கொடிகள் என்று உருவகமாக பயன்படுத்தினார். அவர் தம்மை திராட்சை செடியாகவும் சபையை கொடிகளாகவும், அதிலிருந்து சத்தை எடுத்துக் -கொள்வதாகவும் பேசினார். (யோவான் 15 : 1,2) எனினும் அப்போஸ்தலர் வார்த்தைகளினால் சொல்லப்பட்டிருக்கிற, "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருக்கிறார்" என்ற வசனம் இந்த கருத்தில் அல்ல.

கிறிஸ்து என்ற வார்த்தை அபிஷேகம் பண்ணப்படுதலைக் குறிக்கிறது. ராஜரீக ஆசாரிய அங்கங்கள் அனைவரும் அபிஷேகம் பண்ணப் -படுவார்கள் – தனித்தனியாக அல்ல மொத்தமாக. யூத யுகத்தில் இஸ்ரயேலின் ராஜாக்களும், ஆசாரியர்களும் பதவியில் அமர்த்தப்படுதலின் மூலம் இது சித்தரிக்கப்பட்டது. யூத பிரமாணத்தின்படி ஒவ்வொரு ராஜாவும் ஒவ்வொரு ஆசாரியனும் அபிஷேகம் பண்ணப்பட வேண்டும், இல்லையென்றால் ஊழியம் செய்ய முடியாது. இந்த அபிஷேக சடங்கில் பயன்படுத்தப்படுகிற எண்ணெய் ஒரு விசேஷித்த விதமானது. இது வேறு எந்த காரியத்துக்கும் பயன்படுத்தப்படகூடாது. (யாத்திராகமம் 30: 22–33)

நமது ஆண்டவரும் அவரது விசித்திரமான சரீர அங்கங்களும் பெறுகிற அபிஷேகம் அகில உலகத்திலு -மிருந்தும் வித்தியாசமானது. இது பரிசுத்த ஆவியின் அபிஷேகம், இது பல்வேறு வகையில் பரிசுத்தத்தின் ஆவி என்றும், சத்திய ஆவி என்றும் தேவ ஆவி என்றும் சொல்லப்படுகிறது. இது சத்தியமல்ல, ஆனால் சத்திய ஆவி. வசனத்தோடு அது நிலைத்திருந்தாலும், அது தேவனுடைய வசனம் அல்ல. அது பரிசுத்தத்தோடு முழு இசைவாக இருந்தாலும் அது பரிசுத்தம் அல்ல. அது ஆவி, மனச்சாட்சி. அது தெளிந்த புத்தியோடும், பரிசுத்தத்தோடும், சத்தியத்தோடும் தேவனுடைய வசனத்தோடும் தொடர்புடையது.

இஸ்ரயேலில் ராஜாக்களும் ஆசாரியர்களும், அபிஷேகம் பண்ணப்படுதல், அவர்கள் அந்த பதவிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான தெய்வீக அங்கீகாரமாக இருந்தது. அது போலவே நமது கர்த்தராகிய இயேசுவோடும் இருந்தது. பரிசுத்த பேதுரு கூறுவதாவது: "நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையி -னாலும் அபிஷேகம் பண்ணினார்." (அப்போஸ்தலர் 10 : 38) நமது கர்த்தர் ஒரு மிகவும் உயர்ந்த ஸ்தானத்திற்கென்று தனியாக பிரித்து வைக்கப்பட்டிருந்தார். தெய்வீக ஏற்பாட்டிற்கு இசைவாக, அவர் மாபெரும் உண்மையான ராஜாவாகவும், "மெல்கிசேதேக்கின் முறைமையின்படி," ஆசாரியராகவும் இருக்கப் போகிறார்.

சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருக்கப்போகிறவர்களை தேவன் தனியாக பிரித்து வைக்கிறார். இவர்கள் தேவனுக்கு ராஜாவாகவும் ஆசாரியராகவும், இராஜரீக ஆசாரியராக இருக்கும்படி அழைக்கப்படுகிறார்கள். இதன் விளைவாக கிறிஸ்துவின் தலைமையின் கீழாக ஒருவர் இந்த சரீரத்துக்குள் ஏற்றுக்கொள்ளப்படும் போது, அவர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்துக்கு கீழாக வருகிறார். இந்த அபிஷேகம் பிதாவானவரிடமிருந்து வருகிறது. அவர் மட்டுமே இந்த அங்கீகாரத்தை கொடுக்க முடியும். அது குமாரனிடமிருந்து அவர் மூலமாக மட்டுமே நம் பிதாவானவரிடமிருந்து வரக்கூடும்.

இது யூத பிரதான ஆசாரியனின் அர்ப்பணத்தினால் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. நமது கர்த்தரின் அர்ப்பண சமயத்தில் அவரது அபிஷேகம் ஆரோனின் தலையில் பரிசுத்த எண்ணை ஊற்றப்பட்டதின் மூலம் அடையாளப் -படுத்தப்பட்டது. எண்ணையானது ஆரோனின் ஆடையில் இறங்கியது. இப்படியாக இது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அபிஷேகத்தை அடையாளப்படுத்தியது. சபைக்காக இந்த பரிசுத்த ஆவி இறங்குதல் பெந்தெகோஸ்தே நாளில் வெளிப்படுத்தப்பட்டது.

### அபிஷேகத்திற்கும் ஜெனிப்பித்தலுக்கும் இடையே உள்ள வித்தியாசம்

பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்படுதல் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பித்தலுக்கு சற்று வித்தியாசமானது. யோர்தானில் இயேசுவின் மேல் வந்த பரிசுத்த ஆவி, தேவனுடைய வல்லமையினால் ஜெனிப்பித்தல் மற்றும் அபிஷேகம் பண்ணப்படுதல் ஆகிய இரண்டையும் குறித்தது. நமது கர்த்தர் ஜெனிப்பிக்கப்பட்ட அந்த கணமே அவர் அபிஷேகம் பண்ணப்பட்டார்.

பெந்தெகொஸ்தே நாளில் சபைக்கும் அப்படியே இருந்தது. அவர்கள் தேவனுடைய ஏற்றுக் கொள்ளுதலுக்காக காத்திருந்தார்கள். நம்முடைய கர்த்தர், அவர்களுடைய பலிகள் ஏற்புடையதாக இருக்கும்படி அவர்களது பரிகாரியாக, தேவனுடைய பிரசன்னத்தில் தோன்றியிருந்தார். பரிசுத்த ஆவியை கொடுத்ததின் மூலம் அவர்களது ஏற்றுக்கொள்ளுதலை பிதாவானவர் அங்கீகரித்த பொழுது, அக்கினி மயமான நாவுகள் போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டு, "அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அமர்ந்த பொழுது" அந்த அங்கீகாரம் அவர்களது ஜெனிப்பித்தல் மற்றும் அபிஷேகம் ஆகிய இரண்டுமாக இருந்தது. (அப்போஸ்தலர் 2 : 3) ஜெனிப்பித்தல் தனிப்பட்டவர்களின் காரியமாகவும் அபிஷேகம் ஒட்டுமொத்தமானதாகவும் குறிக்கிறது. நாம் தனித்தனியாக ஜெனிப்பிக்கப்பட்டோம். ஆனால் மொத்தமாக அபிஷேகம் பண்ணப்பட்டோம்.

ஜெனிப்பித்தலையும், அபிஷேகம் பண்ணுதலையும் இரண்டு வெவ்வேறு முன்னேறும் படிகளாக நாம் கருதினால், ஜெனிப்பித்தல் முதலாவது நடப்பதாகவும், பிறகு அந்த ஜெனிப்பிக்கப்பட்ட ஒருவர் அபிஷேகம் பண்ணப்பட்டதாகவும் அதாவது தேவனுடைய சுதந்தரராக அங்கீகரிக்கபட்டதாகவும் நாம் சொல்லக் கடமைப் -பட்டிருக்கிறோம். இது ஒன்றைக் காட்டிலும் இன்னொன்றிற்கு முன்னுரிமை கொடுப்பதாக நினைக்க வேண்டிய அவசியமில்லை. இவைகள் இரண்டும் வெவ்வேறு கோணங்களில் குறிப்பிடப்படுகிற இரு படங்களாக காணப்படுகின்றன. நாம் தனித்தனியாக அபிஷேகம் பண்ணப்படவில்லை, நாம் மொத்தமாக ஜெனிப்பிக்கப்படவுமில்லை.

தேவனிடமிருந்து நாம் பெற்ற இந்த ஆவி நம்மில் நிலைத்திருக்கிறது. ஆவியை இழக்கிறவர்கள் வெளிச்சத்தை இழக்கிறார்கள். மரண நிலைக்குள் போகிறார்கள். அப்போஸ்தலர் வலியுறுத்துகிறதாவது: "ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்." நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் இருப்பது நிறுத்தப்பட்டால் நாம் அபிஷகம் பண்ணப்பட்டதும் முடிவடையும். நமது ஜெனிப்பித்தலின் ஆவியை நாம் இழந்தால் நாம் மரித்து போவோம். நமது ஜெனிப்பித்தல் நமது அனுபவத்தின் ஆரம்பத்தை குறிக்கிறது. உயிர்த்தெழுதல் அதன் நிறைவை குறிக்கிறது. ஒவ்வொருவரும் தனித்தனியாக ஜெனிப்பிக்கப்பட்டு ஆவியில் பிறக்கிறார்கள்.

அபிஷேக சித்திரத்தில் முழு சரீரமும் அபிஷேகம் பண்ணப்படுகிறது. அந்த சடங்கு மறுபடியும் செய்யப்பட வேண்டிய அவசியமில்லை. சுவிசேஷ யுகத்தில் ஆரம்பத்தில் ஒரு சரீரம் அபிஷேகம் பண்ணப்பட்டது. அந்த சரீரத்தில் அங்கங்களாகிற அனைவரும் அந்த ஒரே அபிஷேகத்திற்கு கீழாக வருகிறார்கள். இவர்கள் அனைவரும் அவரது உயிர்த்தெழுதலில், முதலாம் உயிர்த்தெழுதலில், மேன்மையான உயிர்த்தெழுதலில் பங்குபெறுவார்கள்.

## அபிஷேகம் கிறிஸ்துவின் சிந்தையல்ல

நமது கர்த்தர் புதிய சுபாவத்திற்கு மட்டும் ஜெனிப்பிக்கப்படாமல் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார். ஆனால் சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் அதே போல ஜெனிப்பிக்கப்பட வேண்டும். ஏனெனில், "மாம்சமும், இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்காது." நாம் இந்த அபிஷேகத்தை பெற்றோமானால் முதன்மையாக தலையானவரும் அவரது சரீரமுமாகிய கிறிஸ்துவுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற அனைத்திற்கும் நாம் தகுதியானவர்களாக இருக்கிறோம். ஆடுகளின் மாபெரும் மேய்ப்பனை தேவன் முன்னறிந்தது போல இரட்சகராகிய அவரும் இந்த வகுப்பாரை முன்னறிந்திருந்தார்.

நமது கர்த்தர் உலகிற்கு வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, நமது கர்த்தரை தலையாகவும் சபையை சரீரமாகவும் கொண்ட ஒரு அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு கூட்டம் இருக்க வேண்டும் என்று பிதாவானவர் திட்டமிட்டிருந்தார். ( எபேசியர் 1:3,4,22,23 ) கிறிஸ்து கூட்டத்தில் இயேசு முதல் இடத்தில் இருந்தார். அவரது ஆவியையும் அவரது சித்தத்தையும் உடையவர்களும், தேவனுடைய சித்தத்தை உண்மையுடன் மரண பரியந்தமும் செய்ய தங்களது ஜீவனை முழுமையாக அர்ப்பணம் செய்தவர்களும் அவரோடு இணைந்திருப்பார்கள்.

அர்ப்பணிப்பின் இந்த ஆவியை பெற்றிருக்கிற -வர்களுக்காகவும், பலியில் தங்களை ஒப்புக் கொடுத்தவர்களுக்கும், நமது கர்த்தர் அவர்களுக்கு நன்மை செய்யும்படியாகவும் அவர்களது அபூரணங்களையும் கறைகளையும் மூடுவதற்கும் பிதாவானவருக்கு முன்பாக பரிகாரியாக நிற்கிறார். நமது கர்த்தரின் வேலை அபிஷேகம் பண்ணுவதல்ல, ஆனால் நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதை சாத்தியப்படுத்துவதாகும். இயேசு பிதாவின் ஆவியைப் பெற்று அதை பொழிந்தருளினார் என்று பரிசுத்த பேதுரு கூறுகிறார். (அப்போஸ்தலர் 2:33)

தேவனுடைய இந்த ஆவியை நாம் பெற்றிருக்கும் வரை நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதற்கு அது ஒரு ரூபகாரமாக இருக்கிறது. அதை நாம் பெற்றிருக்கும் வரை நாம் பிள்ளைகள் என்கிற உறவை பராமரிப்போம். ( ரோமர் 8 : 9,14 ) நாம் தேவனுடைய பிள்ளைகளானால், அதன் விளைவாக, "நாம் தேவனுக்கு சுதந்தரராகவும் இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகவும்" இருக்கிறோம். "அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய, கடைசி காலத்தில் வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்த சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது." (ரோமர் 8:17; 1பேதுரு 1:4,5)

தேவனுடைய ஆவியை பெற்றிருக்கிறவர்கள் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டால், மகிமையின் சுதந்தரராக இருந்து பரிசை பெறுவார்கள் என்பதற்கான ரூபகாரத்தை பெற்றிருக்கிறார்கள் என்ற கருத்தை நமது வசனம் கூறுகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் அப்போஸ்தலர் யோவான் கூறினதாவது: "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவனும் உங்களுக்கு போதிக்க வேண்டுவதில்லை." ( 1 யோவான் 2:27 ) இந்த அபிஷேகத்தை பெற்றிருக்கிறவர்களுக்கு யாரும் போதிக்க வேண்டியதில்லை. ஏனெனில் அதற்கான ரூபகாரத்தை, நிரூபணத்தை தங்கள் இதயங்களிலும் அனுபவங்களிலும் பெற்றிருக்கிறார்கள். இந்த ரூபகாரங்கள் வேறு யாரைக் காட்டிலும் அவர்களுக்கு மிகவும் வெளிப்படையாக இருக்கிறது.

ஒருவர் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார் என்பதற்கான ரூபகாரங்களை நாம் தேவனுடைய வசனத்தினாலே போதனைகளை பெற்றிருக்கிறோம் என்பதினாலேயன்றி புரிந்துகொள்ள முடியாது. சந்தேகத்திற்கு இடம்கொடாமல், வேத வாக்கியங்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறதற்கான சாட்சியத்திற்கான ஒரு எல்லையை கொடுக்கிறது. பரிசுத்த ஆவி, நம்மில் உள்ள ஜெனிப்பித்தலின் சக்தி, கிறிஸ்துவின் சிந்தையை மென்மேலும் பெறும்படி நம்மை வழிநடத்துகிறது என்று அவைகள் நமக்கு கூறுகின்றன. நாம் கிறிஸ்துவின் சிந்தையினால் அபிஷேகம் பண்ணப்படவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறோம். பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறவர்கள் தான், கிறிஸ்துவின் சிந்தையை அபிவிருத்தி செய்வதை கண்டார்கள்.

## கிறிஸ்துவின் சிந்தையின் குணலட்சணங்கள்

கிறிஸ்துவின் சிந்தை என்பது பிதாவானவரின் சித்தத்தை செய்யக்கூடிய சித்தமாகும். நமது கர்த்தர் குழந்தையாக இருந்த போது, தம் தாயாரிடம் ஒரு சமயத்தில் கூறியதாவது: "நீங்கள் ஏன் என்னை தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க

வேண்டியதென்று அறியீர்களா?" (லூக்கா 2:49) நாம் ஒரு பரம பிதாவை பெற்றிருக்கிறோம் என்பதை அங்கீகரிக்கிறோம். அவரது சேவை மேன்மையான சாத்தியமான சேவையாக இருக்கிறது. அவருடையவர்களாக இருப்பவர்கள் இந்த ஆவியை பெற்றிருக்க வேண்டும். புது சிருஷ்டியின் வேலை பரத்துக்குரிய வேலையாக இருக்க வேண்டும். இல்லையென்றால் அவர் மனுக்குலத்தின்மேல் வந்த தண்டனையிலிருந்து விடுதலை ஆனார் என்பதற்கும் புது சிருஷ்டியாக ஆனார் என்பதற்கும் நிரூபணம் இருக்காது.

நாம் தேவனுக்கும் சத்தியத்துக்கும் சகோதரர்களுக்கும் உண்மையாக இருக்கக்கூடிய ஆவியை பெற்றிருந்தால், நாம் கிறிஸ்துவின் சிந்தையை, மனச்சார்பை பெற்றிருக்கிறோம். நாம் மாம்சீக பலவீனத்தையும் உண்மையிலேயே பெற்றிருக்கிறோம். இவைகளுக்கு எதிராக போராடவும், மென்மேலும் நமது சிந்தையின் ஆவியில் மறுரூபமாகவும் நமது சிந்தை சகோதர ஊழியத்திலும் சத்தியத்திலும் மையப்படுத்தப்படவும் கூடிய நம்முடைய சலுகையாக இது இருக்கிறது.

இந்த திசையில் நமது வைராக்கியம் குறைவுபட்டால், பிறகு முன்னேறுவதற்கு பதிலாக பின்னடைவதற்கான ஆபத்து இருக்கிறது என்பதை நாம் அறியலாம். கர்த்தரின் பிள்ளைகள் தங்களது ஆதி அன்பை இழந்து ஏறக்குறைய குளிர்ந்த நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பதை நாம் கேள்விப்படுகிறோம். எப்பொழுது ஒருவர் தனது ஆதி அன்பை இழந்தார் என்பதை நமது நிலைப்பாட்டிலிருந்து நாம் அறியலாம். அவர்கள் தங்களுடைய சிந்தைகளை பூமிக்குரிய காரியங்களாகிய குடும்பம், வீடு, உலக சொத்துகள் முதலியவைகளுக்கு வழி நடத்தப்பட அனுமதித்திருக்கும் போது அப்படியாகும். இவைகளெல்லாம் பரலோக காரியங்களுக்கான போராட்டம். நாம் நமது சந்தோஷங்களை பூமிக்குரியவை-களிலிருந்து அல்ல, பரலோகத்துக்குரியவைகளிலிருந்தே தேட வேண்டும். கிறிஸ்தவர்கள், முதன் முதலில் தேவனை அறியும் போது பெற்ற ஒரு ஆசீர்வாதமான அனுபவத்தை அவரை நெருங்கும் போது முன்னைப் போல உணரவில்லை என்று சொல்வதை நாம் அடிக்கடி காண்கிறோம். இந்த காரியத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் வியாபாரத்திற்கு சென்றிருப்பார்கள், அல்லது திருமணம் செய்திருப்பார்கள் அல்லது வேறு எதையாவது செய்திருப்பார்கள். அவை பரிசுத்த ஆவிக்கு எதிராக போராடியிருக்கும். அவைகளுக்கு எதிராக நாம் பேசவில்லை. ஆனால், "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால் இவைகளை செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்." இவைகள் நமக்கு சமாதானத்தை ஏற்படுத்தும் காரியங்கள்.

### அபிஷேகத்திற்கான மற்ற ரூபகாரங்கள்

கிறிஸ்துவின் சிந்தையை நாம் பெற்றிருப்பதோடு கூட, நாம் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறோம் என்பதற்கான மற்ற ரூபகாரங்களையும் நாம் பெற்றிருக்கிறோம். நமக்கு ஆவிக்குரிய உணவு தேவைப்படுகிறதை நாம் காண்கிறோம். நமது பசியை திருப்திப்படுத்த நமது பரலோக பிதாவானவர் தெய்வீக திட்டத்தைப் பற்றிய அறிவையும், நமது கர்த்தரைப் பற்றிய அறிவையும் நமக்கு கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு புதிய காட்சியும் நமக்கு புது உத்வேகத்தை நமக்கு தருகிறது. சகோதரர்களில் சிலர் ஆவிக்குரிய பசியில் இருப்பதை நாம் காணும் போது நாம் பெற்றிருக்கிற ஆவிக்குரிய உணவுகளை அவர்களுக்கு கொடுக்காமல் எப்படி வைத்துக்கொள்ள முடியும்? ஒருவர் பூமிக்குரிய இரக்கத்தை பெற்றிருந்து அவைகளை விநியோகித்தால், அவரது குருடான கண்களை திறப்பதற்கான சலுகைகளை தேவன் அவருக்கு தருவார். மாம்சீகத்தின்படி குருடான கண்களை திறப்பது ஒரு ஆசீர்வாதமாக இருக்குமானால் ஆவிக்குரிய குருடான கண்களை திறப்பது எவ்வளவு பெரிய ஆசீர்வாதமாக இருக்கும்! சிலர் ஆவிக்குரிய காரியங்களை பார்ப்பதற்கு அவர்களது கண்களை திறக்கவும் முன்னரே திறக்கப்-பட்டவர்கள் இன்னும் தெளிவாக பார்க்கவும் உதவுகிற ஆசீர்வதிக்கப்பட்ட சலுகைகளை நாம் பெற்றிருக்கிறோம்.

நாம் சத்தியத்தை நேசிப்போமானால் நாம் சத்தியத்திற்கு ஊழியம் செய்வோம். இந்த ஊழியம் உலக கண்டனத்தைத்தான் நமக்கு கொண்டு வரும். பூமிக்குரிய அனுமதி சீட்டை (Passport) கொண்டு வராது. நாம் அதை பணத்திற்காகவோ, சுய நலத்திற்காகவோ செய்வதாகவே உலகம் சொல்லும். ஏனெனில் உண்மையாக அர்ப்பணம் செய்யப்பட்ட தேவனுடைய பிள்ளைகளின் உண்மையான நோக்கத்தை அவர்கள் காணாமல் அவர்கள் நிச்சயமாக தவறு செய்வார்கள். இவைகளை நாம் பொறுமையோடு சகித்தால், அதன்மூலம் நாமே இயேசு கிறிஸ்துவின் உண்மையான போர்வீரர்கள் என்று ரூபகாரப்படுத்துகிறோம்.

பிதாவானவரின் சித்தத்திற்கு தம்மை அர்ப்பணித்ததால் நமது கர்த்தருக்கு அவமானம், நிந்தை வந்தால், நாமும் அதே போல நடத்தப்படுவதால் நாம் ஆச்சரியப்படக்கூடாது. குமாரர்களின் வீட்டின் எஜமானரை உலகமானது பெயல்செபூல் என்று அழைக்குமானால், அவரது அடியார்களை தீமையான பெயரில் அவர்கள் அழைப்பது நிச்சயம். இவையனைத்தையும் நமது நியாயமான ஊழியத்தின் ஒரு பகுதியாக நாம் ஏற்றுக்கொள்ள விருப்பமுடையவர்களாயிருப்பதே, நாம் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறோம் என்பதற்கு இன்னும் ஒரு ரூபகரமாக இருக்கிறது.

ஒரு வேளை கர்த்தருடைய ஜனங்கள் சில சகோதரர்களை சுலபமாக அன்பு செலுத்தக் கூடியவர்களாகவும், வேறு சிலரை சுலபமாக அன்பு செலுத்த முடியாதவர்களாகவும் காண்பார்கள். ஏனெனில் இவர்கள் அன்புக்குரியவர்களாக காணப்படமாட்டார்கள். எனினும் கர்த்தர் இந்த சகோதரர்களை ஏற்றுக்கொண்டு அன்பு செலுத்த முடியும் போது, நாமும் அதையே செய்து, அவர்களது இயற்கையான மனச்சார்பிலிருந்து அவர்கள் வெளியே வர உதவி செய்ய வேண்டும். இப்படியாக நாம் பணக்கார மற்றும் ஏழை, படித்த மற்றும் படிக்காத அனைத்து சகோதரர்களையும் சிநேகிக்கவும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அவர்களுக்கு உதவி செய்யும் விருப்பத்தையும் நாம் அபிவிருத்தி செய்வோம்.

ஒருவர் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார் என்பதற்கான சான்றுகள்: ஆவிக்குரிய காரியங்களில் விருப்பம் அதிகரிப்பது; அறிவிலும் பரலோக கிருபையிலும் வருவதற்கு பிறருக்கு உதவுவது; உலக சிந்தையுடையவர்களிடமிருந்து துன்பப்படுதல்; கிறிஸ்துவின் சிந்தையில் வளருதல்; இது மற்றவர்களிடம் அன்பு, பெருந்தன்மை மற்றும் மன்னிப்பு ஆகியவற்றில் வளருதல் ஆகும். இது தேவனுக்குரிய பக்தியும் அவரது சித்தத்திற்கு கீழ்ப்படிதலும் ஆகும். ஒருவர் சுய பரிசோதனையில் இந்த ரூபகாரங்களை எல்லாம் அவரிடம் இருப்பதாக காணப்பட்டால், தனது இருதயம்

ஆவியின் சாட்சியத்தை பெற்றிருப்பதாக காணப்பட்டால் அவர் ஒரு தேவனுடைய பிள்ளை.

### மகிமையின் நம்பிக்கை

"மகிமை" என்கிற வார்த்தை கனம், கண்ணியம் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறது. சில சமயம் பிரகாசம், ஒளிர்தல் என்று பொருள்படுகிறது. பரலோக பிதாவானவர் யாரும் நெருங்க முடியாத மகிமையின் பிரகாசத்தைப் பெற்றிருப்பதாக வேதவாக்கியங்கள் கூறுகின்றன. நமது கர்த்தராகிய இயேசு கனம், மகிமை மற்றும் உயர்ந்த ஸ்தானத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. ஆதாமைப் பற்றி, அவர் "மகிமையினால் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டார்" என்றும், காட்டு மிருகங்களுக்கும் ஆகாயத்து பறவைகளுக்கும், சமுத்திரத்தின் மச்சங்களுக்கும் மேலாக வைக்கப்பட்டார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ( சங்கீதம் 8 : 5– 8; ஆதியாகமம் 1 : 28 ) "மகிமை" என்ற வார்த்தை ஆதாம் அவரது சிருஷ்டிகரின் சாயலில் உண்டாக்கப்பட்டார் என்று குறிப்பதாக காணப்படுகிறது.

இந்த அதே கருத்துக்களை நமக்கு பொருத்தும் போது, நாம் இன்னும் மகிமையை பெறவில்லை என்று காண்கிறோம். நாம் பெற்றிருக்கும் ஆசீர்வாதங்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கிறோம் மற்றும் தேவனுடைய குடும்பத்திற்குள் நாம் தத்தெடுக்கப்பட்டிருக்கிறதற்கான ரூபகாரமும் ஆகும். தேவன் உண்மையுள்ளவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற மகிமையின் ஆரம்பத்தை, ஆவியின் அத்தாட்சியை மாத்திரம் பெற்றிருக்கிறோம். நாம் பரிசுத்த ஆவியை பெறுவது நம்மில் அபிஷேகம் பண்ணப்படுவதற்காகும். நாம் பரிசுத்த ஆவியை நம்மில் கிரியை செய்ய அனுமதித்தால், நாம் அதற்கு ஒத்துழைத்தால், முடிவு மகிமையாக இருக்கும்.

இப்படியாக நாம் பெற்றிருக்கிற அபிஷேகம், நம்மில் இருக்கிற கிறிஸ்துவின் ஆவி, நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற மகிமையின் நம்பிக்கையாக அல்லது அடிப்படையாக இருக்கிறது. இந்த மகிமை நமது இரட்சகரைப் போல் இருப்பது. இது தேவதூதர்கள், துரைத்தனங்கள் மற்றும் வல்லமைகளுக்கும் மேலானது. இது கர்த்தருக்கு அடுத்தபடியாக உள்ள ஒரு மகிமையாகும். இந்த அபிஷேகம், நமக்குள் இருக்கிற இந்த கிறிஸ்துவின் ஆவி, வரக்கூடிய அனைத்திற்கும் அத்தாட்சி அல்லது நம்பிக்கை அல்லது அடிப்படை ஆகும். கிறிஸ்துவின் இந்த பரிசுத்த ஆவியை அவித்துப் போடாதிருங்கள் என்கிற அப்போஸ்தலரின் அறிவுரையை கவனிக்க வேண்டும். மாறாக, நாம் அதை வளர்க்க வேண்டும், அபிவிருத்தி செய்ய வேண்டும், அதை கவனிக்க வேண்டும். தேவன் நமக்கு அருளியிருக்கிற உதவியை புறக்கணிப்பதின் மூலம் அது இறக்க அனுமதித்தால், பாவத்தை அனுமதிப்பதின் மூலம் அதை அவித்துப் போட்டால், நாம் அதன் மூலம் நாம் ஆசீர்வாதத்திற்கு தகுதியற்றவர்கள் என்பதையும் இரண்டாம் மரணத்திற்கே தகுதியுள்ளவர்கள் என்பதையும் விளங்கப்பண்ணுவோம்.

## R5229

## Dwelling together in Unity

## ஒருமித்து வாசம்பண்ணுதல்

"இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" – (சங்கீதம் 133:1)

சில பூமிக்குரிய குடும்பங்களில் ஒரு குறிப்பிட்ட அளவான ஒற்றுமை இருக்கிறது. அவைகளைப் பற்றி நாம் சில சமயங்களில் கூறுகிறதாவது: "இந்த குடும்பத்தில் அனைவரும் இழுத்து இணைத்துக் கொள்வதாக காணப்படுகிறது." கணவனும் மனைவியும் சகோதரர்களும் சகோதரிகளும் ஒருவருக்கொருவர் உதவி செய்ய நாடுவதை நாம் பார்க்கும் பொழுது, நாம் கூறுகிறதாவது: "அந்த குடும்பத்தில் அன்பு எவ்வளவு அதிகமாக இருக்கிறது." இதன் மூலம் நாம் பூமிக்குரிய அன்பை அதாவது ஒரு குறிப்பிட்ட அளவான மிருக அன்பை குறிப்பிடுகிறோம். இந்த மனச்சாய்பு சரியான ஒன்றாக இருக்கிறது. நமக்கு அருகாமையில் இருக்கிறவர்களிடம் நமக்கு ஒரு விசேஷித்த கடமை, ஒரு கடமையுணர்ச்சி இருக்கிறதாக வேதாகமம் குறிப்பாக உணர்த்துவதாக காணப்படுகிறது. ஒரு மனிதன் தன் சொந்த குடும்பத்தாரை அசட்டை பண்ணக் கூடாது என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. தன் சொந்த குடும்பத்தை விசாரியாமற்போனால் அவன் அவிசுவாசியிலும் கெட்டவனாக இருப்பான். (1தீமோத்தேயு 5:8)

மனிதன் ஆரம்பத்தில் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான். அவன் தெய்வீக அன்பை தனது வாழ்க்கையில் ஒரு ஊக்கமூட்டும் செல்வாக்காக பெற்றிருந்தான். இந்த அன்பு பாவத்தின் பிரதிநிதியாகிய சுயநலத்தால் பெரும்பாலும் நீக்கப்பட்டது. மனிதர்கள் விழுந்துபோன அளவுக்குத்தக்கதாக அவர்கள் சுயநலக்காரர்களாக இருக்கின்றனர். சிலர் தங்களது சொந்த குடும்பத்தின் அங்கத்தினரிடம் தயவாகவும், பெருந்தன்மையாகவும் இருந்து ஒருவருக்கொருவர் உதவி செய்வதில் ஒத்துழைக்க நாடுகின்றனர். இது தவறான கொள்கை என்று நாம் சொல்ல முடியாது. தங்களுடையவர்களுக்கு நன்மை செய்ய நாடுதல் மற்றவர்களுக்கு தீமை செய்யாது. சகோதர சகோதரிகள் ஒருவருக்கு இரக்கம் உள்ளவர்களாகவும், ஒருவருக்கொருவர் உதவி செய்யக்கூடிய ஆவியை உடையவர்களாக இருக்க வேண்டும். இந்த ஆவியை ஒரு குடும்பத்தில் பார்த்தோமானால், "இது ஒரு மகிழ்ச்சிகரமான குடும்பம்" என்று கூறுகிறோம்.

சுயநலம் உள்ளவர்களாக சகோதர தயவு இல்லாத மற்ற குடும்பங்களும் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட குடும்பங்களில் தனது சொந்த குடும்பத்தாருக்கு செய்வதைக் காட்டிலும் அந்நியர்களுக்கு செய்வதை விரும்புவார்கள். அங்கத்தினர்கள் அந்நியரைக் காட்டிலும் தனது குடும்பத்திலுள்ளவர்களில் அதிகமான கறைகளை காண்கிறார்கள். இப்படிப்பட்டவைகளில்; நியாயம் குறைவுபடுகிறது. நீதியின் கொள்கை மீறப்படுகிற இடங்களில் அன்புக்கு பதிலாக விரோதம் உருவாகப்பட்டு, இப்படிப்பட்ட நிலைமைகளில் ஒற்றுமைக்கு இடமிருக்காது.

### சுயநலத்தின் பலன் எதிர்ப்புத்தன்மை

இந்த விதியை கர்த்தரின் குடும்பமாகிய சபையில் பொருத்திப் பார்ப்போமாக. தேவன் உலகில் ஒரு புது குடும்பத்தை அமைத்திருக்கிறார். இது பூமிக்குரிய உறவுகளின்படியல்ல, ஆனால் தேவனுடைய ஆவியின்படியாகும். இந்த குடும்பம் தேவனுடைய ஒரே ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறவர்களை கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. என்ன ஒரு அழகான குடும்பம் இது.! இந்த குடும்பத்திற்கு ஒத்த ஒன்றை கிதியோனின் நாட்களில் நாம் பார்க்கிறோம். கிதியோனின் தகப்பனின் எல்லா குமாரர்களும் இஸ்ரயேலின் மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்டிருந்தார்கள். அவர்கள் ராஜ குமாரர்களை ஒத்திருந்தார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. ( நியாயாதிபதிகள் 8 : 18 ) நம்மோடும்

கூட அப்படியே இருக்க வேண்டும். கர்த்தருடைய ஆவியை நாம் பெற்றிருப்பதால் நாம் நமது வார்த்தை மற்றும் செய்கைகளில் பிரகாசிக்க வேண்டும். எந்த வகையிலும் நாம் "நம்மை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்க வேண்டும்." (1பேதுரு 2:9)

சகல உடன்பாடின்மையும் வெளிப்படுகிற வேராக சுயநலம் என்கிற கோட்பாடு காணப்படுகிறது. கர்த்தருடைய ஆவியில் சுயநலம் என்பது நிச்சயமாக இல்லை. சில சமயங்களில் கர்த்தருடைய பிள்ளைகளிடமிருந்து வெளிப்படுகிற சண்டைகள் மற்றும் பேதங்களின் ஆவி எங்கிருந்து வருகிறது? ஒருவர் தானே மற்றவர்களது சுதந்தரங்களையும் உரிமைகளையும் எடுத்துக்கொள்ள நாடுகிறார். மற்றவர்கள் அதற்கொத்த ஆவியைப் பெற்று இனப்பற்றுடையவர்களாக விரும்புகிறார்கள். ஒருவன் "நான் பவுலை சேர்ந்தவன்" என்றும், மற்றவன் "நான் அப்பல்லோவைச் சேர்ந்தவன்" என்றும், மூன்றாமவன், "நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன்" என்றும் கூறுகிறார்கள். இந்த ஆவி தவறானது. கிறிஸ்துவைத் தவிர வேறு யார் பேரினாலும், நாம் ஒன்று சேர்க்கப்பட கூடாது என்று பரிசுத்த பவுல் குறிப்பிடுகிறார்.

அனைவரும் தங்களது அழிவுக்குரிய சரீரத்தில் கர்த்தருடைய சித்தம் நிறைவேற வேண்டும் என்பதை நாடுவது தான் ஒற்றுமைக்கு மிகவும் சாதகமான நிலைமை. அறியாமை அல்லது ஜெயம் கொண்டிராத அல்லது ஜெயம் கொள்ள இயலாத மாம்சீக பலவீனத்தினால் இந்த பலன் எழும்புவதே ஒரே கஷ்டமாக இருக்கும். சபையின் மற்ற அங்கங்கள் ஆண்டவரின் ஆவியைப் பெற்று, தவறு செய்யும் சகோதரன் வேண்டுமென்றே அல்ல, அறியாமையினாலேயே எதிராக இருக்கிறார் என்று கருதுவார்கள். ஆகையால் அனைத்து தயவுடனும், பெருந்தன்மையுடனும் கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டது போல, தேவனுடைய சித்தத்தை சுட்டிக்காட்ட நாட வேண்டும். இளைய சகோதரன் இது செய்யப்படுவதில் சந்தோஷம் பெறுவான். ஏனெனில் அவன் கிறிஸ்துவின் ஆவியை பெற்றிருப்பான்.

கஷ்டமானது மாம்சத்தினால் இருந்தால், சகோதர்கள் அது வெறும் மாம்சீக பலவீனத்தினால் ஆனது என்பதை அங்கீகரித்து, சகோதரன் எதில் குறைவுபட்டிருந்தான் என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். இதையொட்டி அந்த சகோதரன் தனது தவறுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும். அந்த சகோதரனும் தடையின்றி மன்னிக்கப்பட வேண்டும். ஆகையால் அவன் கற்றுக்கொண்டு, மற்ற சகோதரர்களோடு சரியானபடி ஒற்றுமைக்கு வருவான். இப்படியாக நாம் அனைவரும் ஆண்டவரின் ஆவியைப் பெற்று, முடிந்த வரை ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.

## "சரீரத்தில் பிரிவினை இல்லை"

எனினும் எல்லாரோடும், எப்பொழுதும் "ஒருமித்து வாசம் பண்ணுவது" கூடாத காரியம். தேவன் சாத்தானோடு ஒருமித்து வாசம் பண்ணுவது கூடாத காரியம். சில ஜனங்கள் சாத்தானின் ஆவியை உடையவர்களாக இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களோடு நாம் ஒருமித்து இருக்க முடியாது. அப்படிப்பட்டவர்களோடு தொடர்புக்கு வருவதற்கு மெருகூட்டுதல் இருக்கும். ஆனால் ஒற்றுமை இருக்காது. ஏனெனில் இப்படிப்பட்ட ஐக்கியம் வெளிச்சத்தை இருளுடன் கொண்டு வரும். ஒரு சமயத்தில் பரிசுத்த பவுல் கொரிந்து சபைக்கு எழுதுகிறதாவது: "உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன்." தொடர்ந்து அவர் மேலும் கூறுகிறதாவது: இது போல இருக்க வேண்டும். என்ன தவறு மேலே வந்தாலும் நிலைமையின் இணக்கமின்மை உணர்ந்து கொள்ளப்பட வேண்டும். தவறாக வழி நடத்துகிறவர் வெளியே போக வேண்டும். ஏனெனில் அவர் தவறான எண்ணத்தில் நுழைந்தார். (1 கொரிந்தியர் 11:18,19) அவரது நிலைமையை உணர்ந்து கொண்டு அப்படிப்பட்டவர், "நான் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமல்ல, இவர்களெல்லாம் கர்த்தரின் ஜனங்கள்" என்று கூறிக்கொண்டு வெளியேறுவார். அவர் போகவில்லை என்றால் அவர் போகும்படி அறிவுறுத்தப்பட வேண்டும்.

சகோதரர்களாக இல்லாதவர்கள், வெளிச்சத்தின் பிள்ளைகளாக இல்லாதவர்கள், ஆனால் இருளின் பிள்ளைகளாக இருப்பவர்கள், சகோதரர்களோடு ஐக்கியம் வைத்திருப்பவர்கள் மத்தேயு 18:15-17இல் சொல்லப்பட்டபடி நடத்தப்பட வேண்டும். வேதவாக்கியங்களின்படி இல்லாத எந்த முறையையும் எடுக்கக்கூடாது. இது மட்டுமே சரியான முறை.

நாம் துல்லியமாக வேலை செய்யும் மாபெரும் இயந்திரங்களை அதிக சப்தமில்லாமல் வேலை செய்வதை பார்த்திருக்கிறோம்; அதன் பாகங்கள் ஒருமித்து வேலை செய்கின்றன; அவையனைத்தும் சரியான முறையில் வேலை செய்கின்றன; ஏனெனில் அவைகள் சரியானபடி இணைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஒருமித்து விழுகிறதில்லை. ஆனால் வெறும் சத்தம் மட்டும் தான் வரும். தேவனுடைய குடும்பம் ஒரு மாபெரும் இயந்திரத்தைப் போன்றது. சரீரத்தில் அதன் அங்கங்களை அதனதன் இடத்தில் பொருத்துவது மாபெரும் பொறியாளரின் மேற்பார்வையிலாகும். அவர்களை அவர் தமது சொந்த ஆவியை பகிர்ந்து கொடுத்ததின் மூலம் ஒற்றுமையின் ஆவிக்குள் அவர்களை கொண்டு வருகிறார்.

ஒரு புது என்ஜினோ அல்லது இயந்திரமோ ஆரம்பத்தில் மெதுவாக ஓடும். ஏனெனில் அதன் பாகங்கள் இயங்கும் போது உராய்வு அதிகமாக இருக்கும். அதன் பாகங்களுக்கிடையில் உராய்வு இருப்பதை பொறியாளர் கண்டால் அதற்கு தேவையான அளவு எண்ணெய் போட்டு உராய்வைக் குறைத்து பழுதாவதைத் தவிர்க்கிறார். பாகங்கள் சப்தமில்லாமல் இயங்கும். உராய்வு குறைவாக இருக்கும். இதே போல் தான் கிறிஸ்துவின் சரீர அங்கங்களுடனும் இருக்கும். சரீரத்தில் அவர்கள் புதிதாக இருக்கும் போது, நாம் சில உராய்வுகளை எதிர்பார்க்க வேண்டும். அப்பொழுது நாம் அதிகமான கர்த்தரின் ஆவியை அப்பியாசப்படுத்த வேண்டும். நாம் நமது சொந்த ஆவியையும் சொந்த நோக்கத்தையும் உறுதிப்படுத்த வேண்டும்.

ஒருவர் உராய்வை ஏற்படுத்தினாலும் அவர் சரீர பாகமாக இருக்கக்கூடாது. அவர் புதியவராக இருந்தால் கூட அவர் தன்னை இணைத்துக்கொள்கிற இயந்திரத்தின் பாகம் அல்ல. அங்கே எண்ணெய் அதிகமாக தேவைப்படுகிறது. ஆகையால் ஒவ்வொரு அங்கமும் எந்த அளவுக்கு அபிவிருத்தி அடைந்திருந்தாலும், பரிசுத்த ஆவியின் தேவையில் அவர் இருப்பார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எந்த அங்கத்தினராவது பொறுமையுடன் சகிக்க முடியாதவரென நாம் கண்டால், நாம் ஜெபத்தில் கர்த்தரிடம் சென்று அந்த சகோதரனோடு தொடர்பு கொள்ளும் போது அதிகமான பொறுமையையும், சகோதர அன்பையும் அப்பியாசப்படுத்த அதிகமான அவரது பரிசுத்த ஆவிக்காக ஜெபிக்க வேண்டும். ஆகையால் நாம் கர்த்தருக்கு பிரியமாகவும், கட்டியெழுப்புவதில் ஒருவருக்கொருவர் உதவுகிறவர் -களாகவும், எல்லாருக்கும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்கிறவர்களாகவும் இருப்போமாக.

R5230

## Anointing "The Feet" of Christ

# கிறிஸ்துவின் "பாதங்களை" அபிஷேகம் பண்ணுதல்

''இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்.'' - மாற்கு 14:8

ஆண்டவரின் உதட்டிலிருந்து ஒரு உயர்ந்த புகழுரையை அவரது சீஷர்களில் யாருக்கும் நாம் நினைத்து பார்ப்பது அரிது. இயேசுவின் இந்த கூற்று ஒரு விசேஷித்த ஆறுதலாக இருக்க வேண்டும், குறிப்பாக சபையின் சகோதரிகளுக்கு. சத்திய ஊழியத்தில் சகோதரர்களைப் போல சகோதரிகளுக்கு சந்தர்ப்பமே கிடைப்பதில்லை. பெண் பாலினத்தவர்களுக்கு குறிப்பிட்ட எல்லை இருக்கிறது. நிச்சயமாக மரியாளுக்கும் இருந்தது. அவளுக்கு இயேசுவுடன் கூடச்சென்று அவரது அனைத்து போதனைகளை கேட்கவும், அந்த வழியில் அவரோடு ஒத்துழைக்கவும் இராஜ்யத்தை அறிவிக்கவும் வல்லமையுள்ள காரியங்களை நடப்பிக்கவும் அனுப்பப்பட்ட எழுபது பேர்களில் ஒருவராகவும் இருக்க சலுகை கிடைக்கவில்லை.

இந்த கட்டுப்பாடுகளினால் மரியாள் ஊக்கம் குன்றாமல் அவள் பெற்றிருந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் முன்னேற மிகவும் விழிப்பாக இருந்தாள். அவளும் அவளது குடும்பமும் இயேசுவின் விசேஷித்த நண்பர்களாக இருந்தனர். எவ்வளவு காலம் என்பதை நாம் அறியோம். ஆனால் அடிக்கடி அவர் அவர்களது வீட்டிற்குச் சென்றார் என்பதை நாம் அறிவோம். வேத வாக்கியங்களும் அதை சாட்சியமளிக்கிறது. "இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்.'' (யோவான் 11:5)

லாசரு வியாதிப்பட்டிருந்த பொழுது அவனுடைய சகோதரிகள், ''நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்'' என்று சொல்லியனுப்பினார்கள். அவர்கள் தங்களது விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்தி அவர் வார்த்தையை சொல்லி அனுப்புவரோ அல்லது ஒரு கைக்குட்டையை ஆசீர்வதிப்பாரோ அல்லது வேறு எதையாவது செய்வாரோ என்று வரக்கூடிய பதிலை எதிர்பார்த்திருந்தனர். அவர் ஒரு விசேஷித்த குடும்ப நண்பராக இருந்தபடியால் அவர்களுக்காக அக்கறை கொள்வார் என்று உணர்ந்தனர்.

நமது கர்த்தர் தூரமாக இருந்த போது, லாசரு மரித்து அடக்கம் பண்ணப்பட்ட பொழுது, அவர்களது விசுவாசத்துக்கு அது ஒரு பெரிய சோதனையாக இருந்திருக்க வேண்டும். நான்கு நாட்களுக்கு பிறகு இயேசு பெத்தானியாவுக்கு வந்தார். நன்மையான எதையும் செய்ய மிகவும் தாமதமாக இருந்தது. மரியாள் இயேசுவின் பாதத்தருகே அமர்ந்து அவரது போதனைகளை கேட்டதை நாம் நினைக்கிறோம். தனது சகோதரன் விஷயத்தில் அவர் எந்த உதவியையும் அனுப்பவில்லை என்பதால் மிகவும் சோர்ந்து போயிருந்தாள். அவரை கனம் பண்ணக்கூட அவளுக்கு தோன்றவில்லை. அவர் வந்திருந்தார் என்பதைக் கேள்விப்பட்ட பிறகும் கூட அவள் வீட்டிலேயே இருந்தாள். அவரை வாழ்த்தக்கூட போகவில்லை. இயேசு கல்லறையிலிருந்து லாசரை அழைத்த பிறகு அவளது விசுவாசம், அன்பு மற்றும் வைராக்கியம் புதுப்பிக்கப்பட்டு, பலப்படுத்தப்பட்டது. அவளது விசுவாசம் கடுமையாக சோதிக்கப்பட்டு கடைசியாக வெற்றி கொண்டது.

இந்த தறுவாயில் அவர் சிலுவையில் அறையப் -படுவதற்கு முன்னதாக அவர் எருசலேமுக்கு வந்த போது, வழக்கம்போல அவர்களது வீட்டிற்கு வந்தார். பிறகு லாசருவும், மரியாளும் மார்த்தாளும் விருந்து ஏற்பாடு பண்ணியிருந்தார்கள். அதில் எருசலேம் நகரத்திலிருந்து சில பரியேசர்களும் வந்திருந்தனர். இந்த விருந்துக்கு பிறகு கழுதையில் எருசலேமுக்கு சென்றார். அப்பொழுது அவரது திரளான சீஷர்களால் ராஜாவாக அறிவிக்கப்பட்டார். எல்லாம் மிகவும் சாதகமாக நடப்பதாக காணப்பட்டது; சீக்கிரத்தில் ஜனங்கள் அவரை ராஜாவாக ஏற்றுக் கொள்வார்கள் என்பது போல இருந்தது. (லூக்கா 19:37-40)

சிலர் முன்னரே ஆச்சரியப்பட்டிருந்தார்கள். சிலர் விசுவாசத்தில் தொடர்ந்திருந்தார்கள். இந்த நொடிப் பொழுதே கிறிஸ்துவின் மகிமையின் நேரம் என்று இவர்கள் நினைத்தார்கள். மேலும் தங்களது மகிமைக்கு கூட இதுவே நேரம் என்று நிச்சயமாக உணர்ந்தார்கள். அவர் எருசலேமுக்கு வந்த போது தேவாலயத்திலிருந்து காசுக்காரர்களை விரட்டினார். இதெல்லாம் அனுகூல காரியமாக காணப்பட்டது. பிற்பாடு சில பரிசேயர்களும் சதுசேயர்களும் அவரது போதனைகளில் குற்றம் காண முயற்சித்தார்கள். அவரது பதிலெல்லாம் நன்மைக்கு பதிலாக அவர்களுக்கு தீமையாகவே இருந்தது. ஆதலால் அவரிடம் இன்னும் கேள்வி கேட்க துணியவில்லை. (லூக்கா 20:40)

### குற்றம் கண்டுபிடித்தல் அன்புக்கு எதிரானது

பொதுவான ஜனங்கள் இயேசுவுக்கு ஆதரவாக இருந்தனர். ஆனால் தலைவர்கள் மிகவும் அதிருப்தியடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் கூறியதாவது: "நாம் இவைகளை இப்படியே விட்டு விட்டால், ரோமர்கள் நம்மை மோசமாக நடத்தி நமக்கு எந்த சுதந்தரத்தையும் கொடுக்க மாட்டார்கள். இது நாம் அனைவருக்கும் அவமானத்தைக் கொண்டு வரும்." ஆகையால் பிரதான ஆசாரியன் கூறியதாவது: "ஜனங்களெல்லாரும் கெட்டுக் போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கும்." ( யோவான் 11 : 50 ) ஆனால் இந்த தீர்மானத்தை அமைதியாக வைத்திருந்தார்கள். ஆகையால் பிரதான ஆசாரியனும் மற்றும் ஆட்சியாளர்களும் இரகசியமாக வேலை செய்தார்கள்.

சிலுவையின் அறையப்படுவதற்கு முதல் நாள், இயேசு மறுபடியும் மார்த்தாள், மரியாள் மற்றும் லாசருவின் வீட்டில் இருந்தார். இந்த சமயத்தில் தான் மரியாள் தைலப்புட்டியை எடுத்து உடைத்து இயேசுவின் தலையின் மேல் ஊற்றினாள். அந்த தைலம் இக்காலத்தில் உள்ளதைப் போன்று சாதாரணமானதல்ல. அது விலையுயர்ந்த வாசனை தைலம். நளதம் என்றும் உத்தம தைலம். சிறிய ஒரு வெள்ளைக்கல் பரணியில் வைக்கப்பட்டு இருந்தது.

மரியாள் வெள்ளைக்கல் பரணியை உடைத்து - ஒரு வேளை மூடியை திறந்திருக்கலாம் - தைலத்தை ஊற்றியிருக்கலாம். அவர்களது விருந்தினராக அவர் வந்திருந்த போது அவள் செய்த காரியம், அவள் இயேசுவை கனப்படுத்தியதை வெளிப்படுத்தியது. நமது கர்த்தர் மரியாளுக்கு வெறும் பெரிய மனிதரல்ல. அவர் அவளுக்கு அதைக் காட்டிலும் பெரியவர். அவர் மேசியவாக இருந்தார். அந்த அளவுக்கு அவள் புரிந்திருந்தாள். அவள் அவரை தனது கர்த்தராக தொழுது கொண்டாள், பயபக்தியை காட்டினாள். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு அவள் விலையேறப் பெற்ற வாசனை தைலத்தை அவர் மேல் ஊற்றி தனது பக்தியைக் காண்பித்தாள்.

சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ் மரியாளை குறை கூறி சொன்னதாவது: "இது பணத்தை வீணாக்குவதாக இருக்கிறது. இந்த தைலம் மதிப்புள்ளதாக இருக்கிறது." இந்த காலத்தைக் காட்டிலும் அந்த தைலம் அந்த காலத்தில் மிகவும் மதிப்புள்ளதாக இருந்தது. தற்போது செயற்கை முறையில் ஒரு பூவைக் கூட பயன்படுத்தமால் எந்த நறுமணத்தையும் உருவாக்க முடியும். ஆனால் பழங்காலத்தில் அதைச் செய்வது மிகவும் விலையுயர்ந்ததாகும்.

யூதாஸ், மரியாளை குறை கூறினதால். அவனை நிறுத்தச் சொல்லி இயேசு கூறினதாவது: "அவளை விட்டு விடுங்கள், அவளை ஏன் தொந்திரவுபடுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியை செய்திருக்கிறாள்..... இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்." "அவள் தனது அன்பையும் பக்தியையும் வெளிப்படுத்தினாள். நீங்கள் என்னை பின்பற்றியது போல அவள் என்னை பின்பற்றவில்லை. அவள் ஸ்தீரியாக இருப்பதால் கட்டுப்பாடுகளை பெற்றிருந்தாள். ஆனால் இது ஒன்றுதான் அவளால் செய்ய முடிந்தது. அந்த ஒன்றைச் செய்தாள். அவள் செய்ததை நான் பாராட்டுகிறேன். என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமாக என்னை அபிஷேகம் பண்ணினாள்." (மாற்கு 14:6,8)

### அங்கீகரிப்புக்கான ஆண்டவரின் பாராட்டுரை

"என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமாக என்னை அபிஷேகம் பண்ணினாள்" என்ற இந்த வார்த்தைகளை ஆண்டவர் பயன்படுத்தியது நமக்கு விநோதமாக காணப்படலாம். சீஷர்கள் அவர் மரிக்கமாட்டார் என்று நினைத்தார்கள். அவர்கள் தங்களுக்குள்ளான வாக்குவாதங்களை நிறுத்தினால், இயேசு விநோதமான -வைகளை சொல்லுகிற பழக்கமுடையவராக இருந்தார். அவர்கள் அவரை விட்டு போயிருப்பார்கள். ஒரு சமயத்தில் அவர் கூறியிருந்ததாவது: "நீங்கள் மனுஷ குமாரனுடைய மாம்சத்தை புசியாமலும், அவருடைய இரத்தத்தை பானம் பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவன் இல்லை." (யோவான் 6:53) இந்த வார்த்தைகள் அவர்களை அதிகமாக குழப்பியிருந்தது. அவர், தான் சிலுவையிலறை -யப்படப் போகிறதைப் பற்றி சொன்ன போது, எப்படி உண்மை -யில்லாத வார்த்தைகளை அவர் பேசலாம் என்று நினைத்தார்கள். பரிசுத்த பேதுரு, "இது உமக்கு நேரிடக் கூடாதே, இது உமக்கு சம்பவிப்பதில்லை" என்று சொன்ன பொழுது, இயேசு அவரை கடிந்துகொண்டார். (மத்தேயு 16:22,23)

இந்த வார்த்தைகளும், இந்த காரியங்களும் எதிர்கால நாட்களில் அவர்களது ஞாபகத்திற்கு வந்தன. இப்படியாக அவர்களது விசுவாசம், நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பு எல்லாம் பலப்படுத்தப்பட்டு மிகவும் விலையேறப் பெற்றதாக ஆக்கப்பட்டனர். இப்படியாகத்தான் நமது விசுவாசம் பலப்படுத்தப்படுகிறது.

மரியாளிடம் இயேசு கூறின வார்த்தைகளை நாம் நமக்கு பொருத்திப் பார்க்கும் போது, மரியாளின் செயலின் அங்கீகாரத்தைக் காட்டிலும், மேலான புகழுரைகளை ஆண்டவரின் உதடுகளிலிருந்து யாரும் பெற்றிருக்க முடியாது என்பதை நாம் காணக்கூடும். வெளியரங்கமாக இது அர்த்தப்படுத்துகிறதாவது: அவளால் இதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது. அவளால் இயன்றதை செய்திருக்கிறாள். இந்த வார்த்தைகளில் நாம் எல்லாருக்குமான ஊக்குவிப்பு இருக்கிறது. எனினும் சகோதரர்கள் நம்மை குறை கூறுவார்கள். நாம் கர்த்தருக்கு உண்மையாக இருக்கிறோம் என்பதில் உறுதியாக இருப்போம் என்றால், அவர் நம்மைப் பற்றி அனுதாபத்துடன் "இது அவர்களால் செய்யப்பட்ட பெரிய காரியமல்ல, ஆனாலும் தங்களால் இயன்றதைச் செய்தார்கள்" என்று கூறுவார். நம்முடைய பரம பிதாவானவர் கீழே நம்மை பார்க்கும் பொழுது, நாம் மிகவும் குறைவானதை செய்து கொண்டிருக்கிறோம் என்பதை காண வேண்டும். எனினும் பரம பிதாவானவர் கீழே நம்மை பார்த்து, நம்மால் முடிந்ததை நாம் செய்ய முயற்சித்து கொண்டிருக்கிறோம் என்பதை காண்கிறார் என்பதை நாம் அறிவது நமக்கு ஆறுதலான காரியம்.

இந்த வசனம் சகோதரிகளுக்கு மிகவும் உற்சாகம் அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஊழியம் செய்யக்கூடிய மிகவும் ஒரு தனிப்பட்ட முறையில் விசேஷித்த சந்தர்ப்பங்களை அவர்கள் பெறுகிறார்கள். சகோதரர்கள் ஒருவருக்கொருவர் கால்களை கழுவுதல் முதலான சரீரத்திற்கு ஊழியம் செய்யக்கூடாது என்பதை இது அர்த்தப்படுத்தவில்லை. ஆனால் இது தலை மற்றும் பாதங்களை அபிஷேகம் பண்ணுகிற விசேஷித்த சகோதரிகளின் சலுகையை குறிப்பிடுகிறது.

### உண்மையான பாதங்களுக்கு உண்மையான நறுமண தைலம்

நாம் தற்காலத்தில் பாத அங்கங்கள் என்று அழைக்கக் கூடிய நிலையில் இருக்கிறோம். இந்த கூற்று தற்காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிற சபையின், கிறிஸ்துவின் சரீரத்தின் கடைசி அங்கங்களுக்கு விசேஷமாக பொருந்தக் கூடியதாக இருக்கிறது. "பாதங்களை அபிஷேகம் பண்ணுதல்" என்ற சொற்றொடர், கிறிஸ்துவின் சரீரத்தின் எந்த அங்கத்திற்கும், செய்யக்கூடிய ஊழியம் அவருக்கு செய்யக்கூடியதாக மதிப்பிடப்படும் என்ற உண்மைக்கு கவனத்தை ஈர்ப்பதாக காணப்படுகிறது. இப்படி ஊழியம் செய்கிற அனைவரையும் பார்த்து, அவர்கள் தங்களால் இயன்றதைச் செய்திருக்கிறார்கள் என்று அவர் கூறுவார்.

இந்த விஷயத்தில் மரியாளின் செய்கையும், அவளது ஆழ்ந்த பணிவும் அடுத்த நாளின் அப்போஸ்தலர்களின் நடக்கைகளுக்கு விநோதமானதாக, மாறுபாடானதாக இருந்தது. அவர்கள் பஸ்கா இராப்போஜனத்திற்கு கூடியிருந்த போது, ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய மனதில்லாமல் தங்களை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக உணர்ந்தனர். அவர்கள் சிங்காசனத்தில் ராஜாக்களாக இருக்கப்போகிறார்கள். ஆகையால் தாங்கள் ஒருவருக்கொருவர் தங்கள் கால்களை கழுவிக் கொள்ள போவதில்லை. அது மாத்திரமல்ல, தங்களது ஆண்டவரின் கால்களை கழுவப் போவதில்லை. பிறகு ஆண்டவர் அவர்களது கால்களை கழுவி அவர்களுக்கு ஒரு முன்னுதாரணத்தை வைத்தார்.

ஒருவரையொருவர் கனப்படுத்துவதற்கும், ஒருவருக் -கொருவர் ஊழியம் பண்ணவும், ஒருவருக்கொருவர் மனதைப் பலப்படுத்துவதற்கும் நாடுவதற்கு இது ஒரு விசேஷித்த நேரம். வாசனைத் தைலம் அன்பு மற்றும் பக்திக்கு அழகான ஒரு சித்திரம். ஒருவருக்கொருவர் தயவாக பேசி எப்படி நறுமணத்தை ஒருவருக்கொருவர் ஊற்றிக் -கொள்வது என்பதையும், ஒருவரிடம் இருக்கும் மேன்மை என்ன என்பதை காண நாடுவதையும் அது விளக்குகிறது. "ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல தேவனை பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காக தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து தம்மில் அன்பு கூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்." (எபேசியர் 5: 1,2)

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :

சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com

**FOR PRIVATE CIRCULATION ONLY**